உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உக.] ருதிரோற்காரி-ஹு ஆடி-மீ [பகுதி கூ.
VOl. XXI. July-August-1923. No. 9.

## பலகவித்திரட்டு.

(ஙகூச-ம் பக்கத்தொடர்ச்சி.)

திருவாவடுதுறையாதீன மஹாசந்நிதானமாகிய சுப்பிரமணிய தேசிகமூர்த்தி, சொக்கம்பட்டி மாஜி ஜமீந்தார் பெரியசாமித்தேவருக்குப் பேட்டிகொடுத் துபசரிக்கவேண்டுமென்று, இராமநாதபுரம் ஸமஸ்தான மானேசராயிருந்த பொன்னுச்சாமித்தேவருக்குத் திருமுகம் விடுத்தபோது, அப் பொன்னுச்சாமித்தேவர், சந்நிதானத்துக்கு எழுதியனுப்பிய பத்திரக்கவி:—

உக்கம்பட்டிடையார்களுயர்த்தநிமிர்பெருவாழ்வுமுயர்வேலாய
வக்கம்பட்டிடைந்தவர்பாலனுபவிக்குமின்பமுமெய்யாகாவந்தோ
பொக்கம்பட்டியமனுணவாகாநீரெனுந்துறைசைப்புனிதவாழ்வே
சொக்கம்பட்டித்தலைவற்காண்குவலுன்சொல்வழியான்றுறவரேறே.

உக்கம் - ஆலவட்டம். அக்கம் - கண். பொக்கம் - பொய்.

இராமநாதபுரம் ஸமஸ்தானத்தில். கோட்டைச்சாமித்தேவர் அதிகாரம் செய்திருந்தபோது, மகாநவமித்திருநாளில் வந்தவித்துவான்களையெல்லாம் பரீக்ஷைசெய்து ஸம்மானங்கொடுக்கும ஸமயத்தில், துவாத்திரிம்சதவதானம் - சரவணப்பெருமாட்கவிராயரையும் பரீக்ஷைசெய்ய வேண்டுமென்றாராம்; உடனே கவிராயர்கூறிய வெண்பா:—

*

கற்றபுலவோர்கலியிருளைமாற்றியிசை
பெற்றவாகோட்டைமன்னுபேசக்கேள்—சிற்றறிவை
யெங்கேநீகற்றுயெவருனக்குச்சொல்லிவைத்தார்
துங்காநீவாழ்ந்ததுபோதும்.

செங்கோட்டைக் கவிராசபண்டாரத்தையா மலையாளத்துக்குப் போயிருந்தபோது கூறியகவிகள்:—

தேங்காயைத்தின்றுற்சிரங்காய்வெடிக்குந்தினந்தினமு
மாங்காய்தின்றுன்மிகுவங்காச்சொரிந்திடும்வாழையின்காய்
பாங்காயிராதுபலாக்காயும்வாயுப்பதார்த்தநமக்
காங்காய்வபூதுணங்காய்மாத்திரமலையாளத்திலே.

காற்றுடர்நெய்கொடுப்பானதிற்பாதிகரண்டியிற்போங்
கீற்றுறுதொன்னையிற்பாதியும்போமறுகிண்ணத்திலே
யூற்றியுருக்கையிற்பாதியும்போமுண்ணுமபோதினிலே
சோற்றில்விழுவதுபோர்மாத்திரமன்னசுத்தியதே.

துடர் என்பது மலையாளத்தில் நெய்க்கரண்டிக்குப் பெயராம்.

சேற்றூர்ச்சமீந்தார் சுந்தரதாசுத்தேவர் திருவாவடுதுறை மகாசந்நிதானமாகிய சுப்பிரமணியதேசிகமூர்த்தியைத் தெரிசிக்கப் போனபோது கூறியகவி:—

காவடியிலரசுபுரிமகவான்மற்றுளபுலவோர்களிப்புற்றோங்க
மாவடிவிலோர்வேலைவிடுத்தவுருவொழித்துப்பேர்மாற்றுதிந்தப்
பூவடிவிலுயர்வெய்தவருதுறைசைப்பதியுறையும்புனிதமூர்த்தி
சேவடியைக்கண்டுபணிந்ததனுலென்பவவிருளைச்செகுத்திட்டேனே.

திருவாவடுதுறையாதீனமஹாவித்துவான்—தாண்டவராயசுவாமி, தன்மாணுக்கராகிய சேற்றூர்க் கந்தசாமிக்கவிராயருக்கு விவாகஞ்செய்யவுதவிசெய்யவேண்டுமென மேலகரம் வைத்தியலிங்கக்கவிராயருக்கு எழுதிய கவி:—

தேவரெலாம்பரவுதிருக்குற்றாலச்சிவன்கதைசெந்தமிழாற்செய்த
நாவலர்தம்பரம்பரையிலுதித்தவயித்தியலிங்கநாவலோயிப்
பூவலயமுழுதுமுன்றன்பெருமையேபெருமையெனப்புகழும்வண்ண
மாவலுடன்வருகந்தசாமிநாவலன்மணத்தையணிசெய்வாயே.

இவர் கல்லிடைக்குறிச்சிமடத்திற் சிலகாலம் இருந்தபோது கூறிய கவி:—

தாய்போலுந்தாம்பிரபன்னிநதியுமென்சற்குருவுஞ்
சேயானசெந்திற்பதிக்கந்தவேளுந்தினமவனே
வாயாரவாழ்த்திவருவீரபத்திரவள்ளலுமே
யோயாதென்னுள்ளத்தினுள்ளேயுறைகின்றவொண்பொருளே.

வீரபத்திரவள்ளல் - அக்காலத்துத் திருநெல்வேலியில், சிரஸ்தாருத்தியோகத்திலிருந்தவர்.

அறிவில்லாரிடங் கவிசொல்லிவருந்திய புலவர்கூறிய கவிகள்:—

வணக்கம்வருஞ்சிலநேரங்குமரகண்ட
வலிப்புவருஞ்சிலநேரம்வலியச்செய்யக்
கணக்குவருஞ்சிலநேரம்வேட்டைநாய்போற்
கடிக்கவருஞ்சிலநேரங்கயவர்க்கெல்லா
மிணக்கம்வரும்படிதமிழைப்பாடிப்பாடி
யெத்தனைநாட்டிரிந்து திரிந்தெய்த்தேனையா
குணக்கடலேயருட்கடலேயசுரரான
குரைகடலைவென்றபரங்குன்றுளானே.

தூங்கயானைக்கால்படுத்தினும்படுத்துகசுடர்விழிப்பகுவாய
சிங்கவாயிடைசெலுத்தினுஞ்செலுத்துகதென் புலத்தவர்கோமான்
வெங்கண்மாநரகத்திடைவீழ்த்தினும்வீழ்த்துகவிடையேறு
மெங்கணாயகாதமிழறியார்கண்முன்னியம்புதறவிர்ப்பாயே.

பாட்டியற்செந்தமிழ்பன்னிப்பன்னியீக்
கூட்டியதேனெனக்கோவைசெய்ததை
மோட்டர்கள்பாற்சென்றுமொழிந்தவண்ணம்வி
ணூட்டவாமிர்தத்தைநாய்க்குவார்த்ததே.

இலக்கணம்பார்த்துப்பொருத்தமும்பார்த்தங்
கிபவரூர்பெயர்பார்த்தே
யிசைகவிசெய்துசகுனமும்பார்த்தே
யேகியவ்வூர்புகுந்தவர்வாழ்

தலைக்கடைபார்த்துச்சென்றுநின்றேங்கித்
தருவரோதரார்கொலோவென்னச்
சார்ந்தவர்தம்மைவினவிநாமிந்தச்
சங்கடந்தவிர்ப்பதென்றென்று
கலக்கமுற்றேங்கிவாடுமெம்மிடத்திற்
கடைக்கண்பார்த்தருளவொண்ணாதோ
காமனைமுனிந்தயோகியினுள்ளங்
கனிவுறச்செய்திடுங்கனியே
யலைக்கடலமுதேமலைத்துரைமகளே
யம்மையேவெண்ணெய்நல்லூர்வா
முன்பரைத்தடுத்தாட்கொண்டவர்க்கருளு
மழகியமங்கைநாயகியே.

இரப்பதெளிதெனவித்துவானென்றுசென்று
விலக்கியம்பார்க்கவேணு
மியல்வரவும்வேணுமொருபயல்வரவும்வேணுமுக
விங்கிதஞ்சொல்லவேணும்
வரத்தொடுதியாகத்தையொன்றுபத்தாப்புழுகி
மனதுமெய்ப்பிக்கவேணும்
வாய்வேணுமிசைவேணும்லோபியர்கண்மேற்சொன்ன
வசைசொலிக்காட்டவேணு
முரத்தொடுகடுக்கனசையப்பேசிமோதிர
முருட்டுவிரனீட்டவேணு
முல்லாசம்வேணுமிவையெல்லாமுன்னடிமைக்
குபாயமுடன்வாராமைபா
ணரத்துதிசெயாமற்சிவத்துதிசெயக்கிருபை
நாடினேன்றந்தருளுவாய்
நாதர்தாந்தழுவுமுயர்வேதபாந்தவிமோன
ஞானசாந்தகியம்மையே.

சொற்கலைக்கன்னிக்குத்தந்தைசொன்னோனெங்குந்தோன்றநிலை
நிற்கும்படிக்குப்படிப்பவன்றுயனைதநீணிதிபந்
தக்கொடுத்துப்புனேவோன்பதிதமிழ்க்கன்னிகையின்
பொற்புறுசாரந்தெரியார்சகோதரர்போன்றவரே.

ஒருவர்க்குப் பிணிவந்தால் அறிவிலரும் அறிவினருங்கூறுமாறு:-

குலதெய்வக்குறையென்பான்பேய்கொண்டாடி
குறிகாரன்கன்னிவந்துகுதக்குதென்பான்
பலநோயின்வகைசொல்வான்வாகடத்தான்
பரிந்துண்ணுவிளைவென்பார்பாவைமார்கள்
கலகமிடுமேவலென்பான்மந்த்ரவாதி
கணிதத்தோன்றிசைநாதன்காலமென்பா
னுலகினிலிப்படியறியார்பலர்தாஞ்சொல்வா
ரூழ்வினையின்பயனென்பாருணர்வான்மிக்கோர்.

ஊற்றுமலைச்சமீந்தார் தாஞ் செய்திருக்கிற சுந்தரவிலாசத்தைச் சேற்றூர்ச்சமஸ்தானவித்துவான் இராமசாமிக்கவிராயரைப் பார்க்கச் சொன்னபோது கவிராயர் கூறியகவி:—

முந்தரவிலாசகலநடித்தவுயர்திருமாலைமுப்புரந்துன்
பந்தரவிலாசமதால்வென்றவனைப்பணியிதயாலயபண்பாநின்
சுந்தரவிலாசநிறைசுந்தரத்தைப்பார்த்திடிலத்துறக்கவாழ்வு
மந்தரவிலாசபலையாவெனச்சொல்வார்க்கும்விருப்பாகுந்தானே.

முந்து அரவில் ஆசு அகல எனவும், முப்புரம் துன்பம் தர எனவும் பிரித்துப்பொருள்கொள்க. இரண்டாம் அடியில் விலாசம் என்பதனை வில் ஆசம் எனப் பிரித்து ஒளிபொருந்தியநகை எனக்கொள்க. அந்தரவில் - வானவில். சபலை - மின்னல்.

சென்ற ரௌத்திரி௵ மாமகத்திற் றிருப்பனந்தாள் மடாதிபதி காசிவாசி சொக்கலிங்கசாமிசெய்த அன்னதானமுதலிய சிறப்புநோக்கி, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கூறியகவிகள்:--

மாமகத்திலனதானமுதற்செய்சொக்கலிங்கமுனிவரனைப்போலத்
தாமகத்தின்புறவனதானஞ்செய்வார்பல்லோருந்தாவிவிண்மேற்
போமகத்திபலவுபோர்கற்பகத்துக்கிணையாமோபுரவிமேத
மாமகத்தினுக்குமற்றைவேள்விகளுமிணையாமோவறிவுள்ளீரே.

குமாரகுருபரமுனிவர்செய்பலதானத்து மனங்குலவுதான
மெமர்சொல்வித்தியா தானஞ்சொக்கலிங்கசாமிபுரிந்திசைசீர்கண்டே
தமையுமிசையெய்தவெண்ணியவ்விருதானமும்பல்லோர் தாஞ்செய்கின்று
ரமர்கானமயிலாடக்கண்டிருந்தவான்கோழியாடுமாறே.

மிக்கசீர்க்குமாரகுருபரமேலோர்செய்
மிளிர்காசிமுதற்றானத்தறங்கள்காக்கச்
சொக்கலிங்கமுனிவானுஞ்சாமிநாத
சுகுணமுனிவனுஞ்சேர்ந்ததோற்றங்கண்டே
யக்கமணிபுனைந்தநாவாசும்பிள்ளை
யாருமுடன்சேரமகிழடியார்போல
விக்கடற்பூமியிற்சைவரினுமற்றோர்க
ளெய்துமகிழ்ச்சியினையெம்மாலியம்பொணாதே.

தவவொழுக்கம்வித்தையனஞ்சொனதானந்திருப்பணிபூதலவிருத்தி
சிவமெனுநற்குமாரகுருபார்காசிமுதன்மடத்திற்செய்துவைத்தா
ரிவைகளிலொவ்வொன்றேரோர்முனிவர்செய்தார்நீயிங்கெலாஞ்செய்கின்று
யவரெலாமோருருவாஞ்சொக்கலிங்கசாமியுன்சீரதிகந்தானே.

எட்டையபுரம் சமஸ்தானத்தில் ஊரிலுள்ள பிள்ளைகட்குப் பாலுதவுவது கண்ட வொருபுலவர் கூறியகவி:—

ஆர்க்கின்றவண்டபகிரண்டகூடத்திற்கப்புறத்தும்
பார்க்கின்றகீர்த்திக்குமாரெட்டவேள்பண்ணைப்பான்மகப்பால்
வார்க்கின்றபோததையேற்கின்றபேர்கையில்வள்ளஞ்சிந்தி
யீர்க்கின்றதுள்ளிகண்டாற்கடல்வீழ்வதிலைக்கண்ணனே.

எட்டையபுரத்தில் மானேசராயிருந்த ராமசாமிப்பாண்டியன் ஒரு பிள்ளையைபெடுத்து வளர்த்தபோது கடிகைப்புலவருளொருவராகிய நமச்சிவாயப்புலவர் கூறிய கவி:—

முன்னம்பிள்ளையெனவேவளர்த்திட்ட
மூன்றுவேந்தரைத்தின்றவென்வாய்தனக்
கன்னம்பிள்ளைமருந்தாயினதிதை
யாரிடஞ்சொல்லியாற்றிடுவேனையா

தென்னம்பிள்ளைதெருத்தொறும்வைத்தது
செல்லப்பிள்ளைகள்போல்வாடக்கண்டுமே
யின்னம்பிள்ளைவளர்க்கத்துசங்கட்டு
மெங்கள்ராமசுவாமியெட்டேந்திரனே.

ஊர்க்காட்டுச்சமீந்தார் தம் கலியாணம் நிறைவேறினபின் வந்த சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான் இராமசாமிக்கவிராயரை நோக்கிக் கலியாணமாகும்போதி லேன்வரவில்லை யென்றபோது கவிராயர் கூறிய கவி:—

துணையெனச்சொல்வோர்க்கருளுஞ்சிவன்சேதுராயசெயதுரைகல்யாண
மணவரையின்சிறப்பதனைப்பார்ப்பதனுக் காயிரங்கண்வான்கோனுற்றான்
குணமுடையபிரமனுமேயெண்கணுற்றான்பன்னிருகண்குமாரனுற்ற
னிணைவிழியாற்பார்ப்பதனுக்கடங்காதென்றன் றுவாராதிருந்தேன்யானே.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாயிருந்த பாண்டித்துரைத்தேவரவர்கள் இராமாயணத்தில் அங்கதன்றூதுப்படலத்தை யொருநாட்பிரசங்கித்தபோது சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கூறிய கவி:—

அரசங்கமுடையாருட்கல்வியினுமதிகனெனலானோனென்று
நரசங்கத்தொருமதிபோலுதித்தபாண்டித்துரைமாராசனிந்தத்
திரசங்கத்தவர்கேட்பராமகதையினையெடுத்துத்தேன்மேகம்போற்
பிரசங்கமழைபொழிந்தானெவ்வகையோர்களும்வியந்துபேசத்தானே.

வேடர்சேரியில் ஒருவன் கத்தூரிவிற்றதை யொரு புலவர் கூறிய கவி:—

நானமென்பதுமணங்கமழ்பொருளெனநாவிலுண்குதுமென்று
ரூனவேல்விழிமங்கையரணிகுவதுயர்முலைத்தடத்தென்ன
வானதங்கதுபூசினல்வீங்கியதடங்குமோவெனக்கேட்டார்
கானவேடுவச்சேரிவிட்டகன்றனன்கடிதினில்விலைவாணன்.

திருவாவடுதுறையாதீனத்துத் தம்பிரான்சாமியொருவர் மலையாளத்தரசரைக்காணச்சென்று காண்டற்கிடங்கொடாமையாற் கூறியகவி:—

மாறிடத்துழலும்வேற்படைவஞ்சிமன்னவசெந்தமிழ்மயில்யாங்
கூறுமூவேந்தர்திருமுடிதுளக்கத்துலவினேம்வல்லவன்கயிலை

யாறுசேர்சடையானவைமுனமெம்மையணிசெய்தானரியப்பொதுப்பெண்
சீறுமென்றுணர்ந்தாய்நீயினிமதியாய்திருமுனிமலையிலேகுதுமே.

பாற்கரசேதுபதியவர்கள் பிதா முத்துராமலிங்கசேதுபதியவர்கண்மீது திருவாவடுதுறையாதீன மஹாவித்துவான் மீநாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இபற்றிய செய்யுள்:—

அளந்தறியவொண்ணாதபரம்பொருளினிடத்தன்புமமையாநீதி
விளங்குபெருங்கோடாதசெங்கோலும்பல்லுயிர்க்குமேவநன்கு [ந்த
துளங்குமுழுமதிக்குடையுந்தூவாதகொடைத்தொழிலுந்தோன்றவாய்
வளந்தழைபுமுகவைமுத்துராமலிங்கச்சேதுபதிமன்னன்வாழ்க.

எண்ணியவான்சீர்த்திமுத்துராமலிங்கச்சேதுபதியேந்தானின்பா
ணண்ணியவர்கழறுமுனநனிகருணையாற்கொடுத்துநயக்குநின்னைப்
புண்ணியத்தின்பொருளறிந்துகொடுத்திடுங்கற்பகங்கொல்லோபொருளோமற்று
கண்ணியசிந்தாமணியோதேனுவோநிகராதல்கருதிலின்றே. [ங்

ஒரு மாமகத்திலே திருவாவடுதுறையாதீனத்துக்கு வந்த சேற்றூர்ச் சமஸ்தானபதிமீது, மகாவித்துவான் மீநாட்சிசுந்தரம்பிள்ளையவர்களியற்றிய செய்யுள்:—

திருவியலுஞ்சேறைநகரிராசதானித்தலத்திற்றிங்கள்போல
வுருவியலுங்கவிகைமுத்துச்சாமிப்பாண்டியனுயிர்களுவப்பமேவி
மருவியசுந்தரமகாலிங்கவேளமைச்சியற்றவழிநடாத்தும்
பொருவியலாவரசுரிமைக்கொப்பேதின்றியாவர்களும்புகலுவாரே.

இன்னகாரியத்தால் இன்னபாவஞ்செய்தவரென அறியலாமெனக் கூறியகவி:—

பிறந்தவரிற்சப்பாணிபித்தர்குருடூமையுடற்பெருநோயாளர்
குறைந்தகால்பெருவயிறுதுட்டமிவையனைத்தையுமேகூறக்கேண்மி
னறம்பிழைத்தார்கற்பழித்தாரரசனைக்கொன்றார்குருவினடிபோற்றாதார்
பிறன்கடைபிற்றிரிந்தவர்களிவரென்றேயாகமங்கள்பேசுமாறே.

(தொடரும்.)

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

# கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(௲எஉ—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

92. தாறு மாய் தறுகண் குன்றம் தட மத அருவி தாழ்ப்ப,
ஆறும் ஆய்க் கலின மா விலாழியால் அழிந்(து)ஓர் ஆ(று)ஆய்ச்,
சேறும் ஆய்த், தேர்கள் ஓடத் துகளும் ஆய், ஒன்றோ(டு) ஒன்று
மாறு மா(று) ஆகி வாளா கிடக்கிலா மறுகிற் சென்றார்.

இ-ள். (தம்[-தெருக்களின்] இடத்திலேசெல்லும்) யானைகள் (கருமையான) பெரிய மத அருவிபொழிய (அதனால் தாம்[-தெருக்கள்]கருநிற) ஆறாகி, (அங்கேசெல்லும்) குதிரைகளின் (வெண்மையான) வாய் நுரையால் (கருநிறம்) சிதைந்து (மாறி வேறு) ஓர் ஆறாகித், தோகள் ஓட(ப் புழுதி கலப்புற்று)ச் சேறாகி, (திரும்பவும் தேர்கள் ஓடப் புழுதி அதிகமாகக்கலந்து) புழுதியாகி, (இவ்வாறாக) ஒருசமயநிலைமையினின்று மறுசமயநிலைமை மாறி மாறி வேறுபட்டுச் சும்மா (இருந்தபடியே ஒரு தன்மையாகக்) கிடவாத தெருக்களிலே (அவர்கள்) சென்றார்கள்.

தாறு—இரும்புமுள்; மதங்கொண்டயானைகளை அடக்க, அவைகளின் மதம்வழியும் கன்னத்துளையுட்செலுத்தப்படுவது. மாய்—மாய்க்கின்ற" முரிக்கின்ற. தறுகண்—கடுகக்கொல்லுதல் (பத்துப்பாட்டு அரும்பத அகராதி). தாழ்ப்ப—தாழச்செய்ய—சொரிய. கலினம்—கடிவாளம். மா—குதிரை. விலாழி—குதிரைவாய்நுரை. வாளா—சும்மா.

93. நெய் திரள் நரம்பின் தந்த மழலையின் நிறைந்த பாடல்,
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்,
கை வழி நயனம் செல்லக், கண் வழி மனமும் செல்ல,
ஐய நுண் இடையார் ஆடும் ஆடக அரங்கு கண்டார்.

இ-ள். (வீணைவாசிக்கும் மாதர்) நரம்பு (ஓசையோடு ஒற்றுமைப் பட, அது) போலப் பாடும் பாடலோடுகூடிய வீணை (வாசிப்பு)க்குப் பொருத்தமாய் மிருதங்கம் ஒலியாநிற்க, (நாட்டியப்)பெண்கள் (அப்பாடலின்கருத்துப் புலப்பட அபிநயிக்கும்) கைவழியே கண்கள் செல்லவும்

கண்கள்வழியே மனமும் செல்லவும் நர்த்தனம்புரியும் நாடகசாலைகளை (அவர்கள்) கண்டார்கள்.

நெய்—தேன். நெய் திரள் நரம்பு—தேன் தாரை போல உருட்சியான நரம்பு. ("நரம்பின் நான்றதேன்" அகலிகைப்படலம் சுஉ) இங்கே நரம்பு ஆகுபெயராய் அதன் ஓசையைக் குறித்தது. நரம்பின்—நரம்பின் ஓசைபோல. தந்த (பாடிக்) கொடுத்த—பாடிய. மழலையின் இயன்ற பாடல்—மழலைச்சொல்லால் அமைந்த பாட்டு. தைவரு—(விரலால்)தடவுகின்ற வீணை, ஆகுபெயராய் வீணையின் ஒலியைக் குறித்தது. ஐய நுண் இடையார்— 1. (உண்டோ இன்றோவென்று) சந்தேகித்தற்குரிய மிகச்சிறிய இடையையுடைய மாதர்; 2. அழகையுடைய மிகச்சிறிய இடையையுடையமாதர். ஐயம்—சந்தேகம். ஐ—அழகு. ஐய—அழகையுடைய.

மனம், எல்லா அவயவங்களிடத்தும் சென்று, அவற்றோடுகூடி அவற்றைத் தொழிற்படுத்துவதாதலால், அது, அவிநயக்குறிகாட்டக் கையைச்செலுத்திக் கைவழியே கண்ணைச்செலுத்திக் கண்வழியே தானும் சென்றதென்றார்.

94. பூசலின் எழுந்த வண்டு மருங்கினுக்(கு) இரங்கிப் பொங்க,
மா(சு) உறு பிறவி போல வருவது போவ(து) ஆகிக்
கா(சு) உறு பவளச் செம் காய் மரகதக் கமுகில் பூண்ட
ஊசலின், மகளிர், மைந்தர் சிந்தையோ(டு) உலாவக் கண்டார்.

இ-ள். (ஊஞ்சலாடும் மாதர்கள் அணிந்த பூமாலைகளிலிருந்து சண்டையிட்டு, அந்தச்)சண்டையினால் மேலெழும்பியவண்டுகள் (மாலைப் பாரத்தோடு தம்பாரமும் சேர்ந்தால், இடை முரிந்துவிடுமென்று) இடை (யின்மென்மை)க்கு இரங்கி (எழுந்தாற்போல) எழாநிற்க, (மாறிமாறி வரும்) பிறப்புப்போலச் செல்லுவதும் திரும்புவதுமாகிக் கமுகமரத்திலேபூட்டப்பட்டுள்ள ஊஞ்சலிலே (யிருந்து அந்த) மாதர்கள் (தம் அழகிலே யீடுபட்டுத் தம்மைவிட்டுப்பிரியாத) ஆடவர்மனத்தோடு ஊஞ்சலாட(அவர்கள்) கண்டார்கள்.

பூசல்—சண்டை. மருங்கு—இடை. இரங்கி—1. வருந்தி; 2. கருணை செய்து. பொங்கல்—எழுதல் (புறவெண்பாமாலை. அரும்பத அக

ராதி); கிளர்தல் (பரிபாடல் அரும்பத அகராதி); மேன்மேற்கிளர்தல் (புறநானூற்று அரும்பத அகராதி). மாசு—குற்றம். காசு—குற்றம். மாரகதக் கமுகு— 1. பச்சை (இலை)க் கமுகு; 2. "மாரகதமணியாற் செய்த கமுகு". ஊசல்—ஊஞ்சல். மகளிர் உலாவ—மாதர் அலைய.

95. வள் உகிர்த் தளிர்க் கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள் என நரம்பு வீக்கிக், கண்ணொடு மனமும் கூட்டி,
வெள்ளிய முறுவல் தோன்ற விருந்(து) என மகளிர் ஈந்த,
தெள் விளிப் பாணித் தீம் தேன் செவி மடுத்(து), இனிது சென்றார்

இ-ள். (வீணைவாசிக்கும்) மாதர்கள் கூரியநகங்களையுடைய தளிர் போலும் கைவருந்த வீணை முறுக்காணிகளைப் பிடித்து (முறுக்கி), ஒழுகும் தேன் (தாரை) போன்ற நரம்பைக் கடுமைபட (இறுக)ச் செய்து, கண்ணும் மனமும் ஒன்றுபடச்செய்து (நோக்கி), (சிறிதே) வெண்பற்கள் தோன்ற (ப் புன்னகைசெய்து) விருந்துணவுபோல அளித்த தெளிந்த இசைப்பாட்டாகிய இனியதேனைச் செவிவாயால் உண்டு (அவர்கள்) இனிதாகச்சென்றார்கள்.

வீணைவாசிக்கும் மாதர்கள் தாம் விருந்தூட்டுவோராகக் கேட்போர் விருந்துண்போராக, விருந்தூட்டும் மனமகிழ்ச்சி வெளிப்பட உள்ளன்போடு நோக்குதலும் புன்னகையும்செய்து, வீணைவாசிப்பாகிய விருந்துணவை அவ்விருந்தினர் செவிவாயால் உண்ணும்படிசெய்தாரென்பது கருத்து.

வீணைவாசிப்போர்க்கு அவ்வாசிப்பால் இயல்பாகவுண்டாகும் மனமகிழ்ச்சியைக் காட்டும் இனியபார்வையையும் புன்னகையையும் விருந்தினரை இனிதுநோக்கிப் புன்முறுவல்புரிந்து இன்முகங்காட்டி உபசரிக்கும் குறிகளாகக் கவி ஆக்கிக்கொண்ட நயம் கவனிக்கத்தக்கது.

96. வாள் அரம் பொருத வேலும், மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடும் கிடந்த நீலச் சுருளும், செம் கிடையும் கொண்டு
நீள் இரும் களங்கம் நீக்கி, நிரை மணி மாட நெற்றிச்
சாளரம் தோறும் தோன்றும் சந்திர வுதயம் கண்டார்.

இ-ள். வேலும், வில்லும், வண்டுகளோடுகிடக்கும் நீலமலர்ச் சுருளும், செங்கிடைச்சும் தன்னிடத்தேகொண்டு மாளிகைகளின்முகப்

புக்களில் உள்ள பலகணிகள்தோறும் தோன்றும் சந்திரோதயத்தை (அவர்கள்) கண்டார்கள்.

மாதர்முகத்துக்குக் களங்கம்நீங்கிய சந்திரனும் அவர்கள் கண்ணுக்கு வேலும் நெற்றிக்கு வில்லும் முடித்தகூந்தலுக்கு நீலமலர்ச்சுருளும் இதழுக்குச் செங்கிடைச்சும் உவமம்.

வாள் அரம் பொருத வேல் - ஒளியையுடைய அரத்தினுல் அராவப்பட்ட வேலாயுதம். பொருதல் - போர்செய்தல்; இங்கே தாற்பரியார்த்தமாக அராவுதலைக்குறித்தது. வண்டின் கேளொடுகிடந்த - வண்டின் உறவொடு கிடந்த - வண்டுமொய்க்கப்பட்டுக்கிடந்த. செம்கிடை— சிவந்தகிடைச்சு. நீள் இரும் களங்கம் - நீண்ட (காலமாக வுள்ள) பெரிய களங்கம். நிரை மணி மாட நெற்றிச் சாளரம் - வரிசையாகவுள்ள இரத்தினகசிதமான மாளிகைகளின் முன்பக்கத்தில் உள்ள பலகணிகள்.

பலகணிவழியாகத் தெருவில் நிகழ்பவைகளைப் பார்க்கும் மாதர் முகங்கள் தோன்றுதலைச் சந்திரோதயமென வியப்பும் நயப்பும் உறும்படி கூறினர். சந்திரன் ஒன்றே. அதுவும் பகலில் ஒளிமழுங்குந்தன்மையுள்ளது. அன்றிக் களங்கமுடையது. அவ்வாறிருக்கவும் பகலிலே ஒளிகெடாத களங்கமில்லாத பல சந்திரன்கள் உதயமாயின என்ற நயம் பாராட்டத்தக்கது.

97. மெய் வரு போகம் ஒக்க உடன் உண்டு விலையும் கொள்ளும்
பை அர(வு) அல்கு லார் தம் உள்ளமும் பளிங்கும் போல
மை அரி நெடும் கண் நோக்கம் படுதலும் கருகி வந்து
கை உறச், சிவந்து காட்டும் கந்துகம் பலவும் கண்டார்.

இ - ள். காம இன்பத்தை (ஆடவரோடு தாமும்) சமமாக அநுபவித்தும் (அதிகமாக அவ் இன்பத்துக்கு) விலையையும் வாங்கிக்கொள்கின்ற விலைமாதர்மனத்தையும், பளிங்குக்கல்லையும் போல, (மாதர்களுடைய கருமையான) கண் பார்வைபடக் கறுத்தும் (அவர்களுடைய சிவந்த) கைபடச் சிவந்தும் (தம்மைச்சார்ந்தபொருளின் நிறமாகத் தம் நிறத்தை மாற்றிக்) காட்டும் பந்துகளை (மாதர் ஆடுதலை அவர்கள்) கண்டார்கள்.

மெய் வரு - (ஐம்புலநுகர்ச்சிக்கிடமான) உடம்பினுல் வருகின்ற. ஒக்க - ஏற்றம் தாழ்வு இல்லாமல். உடன் உண்டு - கூட அநுபவித்து. 'பை அரவு அல்குலார்' என்பதை 'அரவுப்பை அல்குலார்' எனக் கூட்டிப் 'பாம்பின்படத்தையொத்த அரையையுடையார் (ஆகிய வேசியா)' எனப் பொருள்கொள்க. "அரை நிதம்பம் அல்குல்" (உரிச்சொல் நிகண்டு—நுஎ). "கடி தடம் நிதம்பம் அரையே அல்குல்" (பிங்கல நிகண்டு—க00உ) இந்தச்சொற்கள் 'ஜனனேந்திரியத்துக்கு மேலாகவுள்ள அவயவம்' என்ற பொருள் குறித்தவை. ஆன்றோர், மாதர் அல்லது மைந்தர்களுடைய அவயவவருணனைசெய்யுமிடங்களில் வரும் இச்சொற்கள், சாதாரணமாகக்கருதப்படுகிறபடி, இடக்காடக்கற்பொருள் குறிப்பனவல்ல. "அல்குல் கடி தடம் என்னும் பதங்கள் ஆண்மக்களை வருணிக்குமிடத்தும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. 'பூந்துகில் சேரல்குல் காமரெழில் விழலுடுத்து' எனத் தசரதன் ராமனைநோக்கிப் புலம்புவதாகக் குலசேகராழ்வார் கூறுகின்றார். தவநிலையில்நின்ற அருச்சுனனும் வேடவடிவங்கொண்டுவந்த சிவபெருமானும் மற்போர் செய்கின்றகாலத்தில், கடிதடத்தாலும் மற்போர்செய்தாரென்று வில்லிபுத்தூரார் கூறுகின்றார்" (செந்தமிழ் 20-வது தொகுதி ந-வது பகுதி உஉடு, உஉசு-ம் பக்கங்களைப் பார்க்க;)

வேசியர், தம்மையடைந்த ஆடவர்பால், காதல் இல்லாராயினும் உடையார்போல நடித்தலால், வேசியர்மனத்தில் இல்லாதகாதல் உள்ளதாகத் தோன்றும்; பளிங்குக்கல்லை அடுத்த பொருளின் நிறமும் அக்கல்வில் இல்லையாயினும், உள்ளதாகத்தோன்றும்; அவ்வாறே பந்துகளைச்சேர்ந்த மாதர் கண்ணிறம் கைந்நிறங்கள் அப்பந்துகளில் இல்லாதிருந்தும் உள்ளனவாகத் தோன்றின என்றார்.

இப்பாட்டின் முதலடிக்கருத்துப் பின்வரும்பாட்டில் இனிதெடுத்தாளப்பட்டிருப்பது காண்க.

அலை விழிக் கணிகை மாதர் ஆடவர் தமக்கு நல்கும்
இலை நிகர் எனும் இன் பத்திற்(கு) இன்பமும் சமமாக் கொண்டு
விலை என நிதியும் கோடல் வியப்பிற்றே! ஏற்றம் ஆக,
மலை நிகர் தனங்கள் ஈந்தோர் மலை நிகர் தனமும் கொள்வார்.

(காஞ்சிப்புராணம்—நகரப்படலம்—நுச).

வேறு.

98. பொன்னின் சோதி போதினின் நாற்றம் பொலிவே போல்,
தென் உண் தேனின் தீம் சுவை, செம் சொற் கவி இன்பம்
கன்னிம் மாடத்(து) உம்பரின் மாடே, களி பேடோ(டு)
அன்னம் ஆடும் முன்துறை, கண்(டு) அங்(கு) அயல் நின்றார்.

இ - ள். பொன்னின் சோதியும், பூவின் மணமும், தேனின் சுவையும், கவியின் இனிமையும்போலச் சிறந்த சீதாபிராட்டியை, (அவர் வாழும் கன்னிகா) மாடத்தின்மேடையிலே, (அம்மாடத்துக்கெதிரே) பெட்டை (அன்னங்) களோடு (ஆண்) அன்னங்கள் கூடிவிளையாடுகின்ற (தடாகத்) துறைமுன் (அவர்கள் சென்றபோது) கண்டு அவ்விடத்தில் (அந்தமாடத்துக்குச்) சமீபமாக (ப் பிராட்டியாரைச் செவ்வையாகப் பார்க்கும்படி) நின்றார்கள்.

பொன்னொளி, பூமணம், தேன்சுவை, கவியின்பம் உவமானங்கள்: சீதை உவமேயம். உவமேயத்தைக் கூறாமல் உய்த்துணரவைத்தார். இவ்வாறே இப்படலம் ௹௩-ம் பாட்டில் "வில்லொடும் இழிந்ததோர் மேகம்" என உவமானமட்டும் கூறி (இராமன் ஆகிய) உவமேயத்தைக் கூறாமையை நோக்குக.

போதின் இன் நாற்றம்—பூவின் இனிய மணம். பொலிவு—சிறத்தல். 'பொலிவேபோல்'—சிறத்தல் போன்ற—சிறத்தல் போன்ற சிறப்புடைய' 'பொலிவேபோல்' என்பதைச் சோதிபொலிவேபோல், நாற்றம்பொலிவே போல், சுவை பொலிவேபோல், இன்பம் பொலிவேபோல் எனக் கூட்டிப் பொருள்கொள்க. தென் உண் தேனின் தீம் சுவை—வண்டு உண்ணும் தேனின் உருசி. எதுகைக்கு இயையத் 'தேன்' (—வண்டு) 'தென்' ஆயினது என்பர் சில உரையாசிரியர். இவ்வாறு நெட்டெழுத்துக் குற்றெழுத்தாக்கப்பட்டிருப்பது அரிதாகச் செய்யுளிற் காணப்படும். 'தீயேன்' 'கூறினும்' என்பவையிரண்டினும் முதல்நெட்டெழுத்துக் குறுக்கப் பட்டு முறையே "திருத்தார்நன் றென்றேன் றியேன்" என நன்னூல் ௫-ம் சூத்திரவுதாரணத்தினும், "கோலாற்கடாய்க் குறினும்" என நாலடியாரினும் வருதல் காண்க. 'தென் உண் தேன்' என்பதற்கு '(வண்

டின்) இசைபொருந்தியதேன்' என்றும் பொருள் கூறலாம். தென்—இசை (பிங்கலநிகண்டு—ந௬௱௭௫). மாடத்து உம்பரின்மாடே—மாடத்தின் மேல் இடத்தில்-மேல்மாடத்தில்-மேல்மாடியில்-மேடையில். உம்பர்—மேல். மாடு—இடம். பேடு—பெட்டை (அன்னம்). ஆடல்—விளையாடல். 'முன்துறை' என்பது 'துறைமுன்' என்ற பொருளில், மணிமேகலையினும், ஐங்குறுநூற்றினும், பரிபாடலினும் வருகின்றது. (ஷை நூல்களின் அரும்பதவுரைபார்க்க,) 'கன்னிம்மாடம்' 'அன்னம்மாடும்' என்பவைகளில் ஓசையின்பம்பற்றி மகர ஒற்றுக்கள் மிகுக்கப்பட்டன.

'சோதிப்போதினின்' 'தேறற்றீஞ்சுவை' 'கழிபேடு' என்ற இவை பாடபேதங்கள்.

இப்பாட்டினுள், பின்னிரண்டடிகட்குப் பேதப்பட்ட பல உரைகள் உள்ளன. அவை வருமாறு :—

"கந்நிகாமாடத்தினருகில் அன்பின் மிக்க பெட்டையன்னங்களுடன் ஆணன்னங்கள் கூடிவிளையாடாநின்ற முன்றில்களைப் பார்த்து அவ்விடத்துச் சமீபமாய்நின்றார்கள்" ஸ்ரீ-இராமசாமிநாயுடு.

"கன்னிமாடத்தின் மேலிடத்தில்(சீதாபிராட்டிவீற்றிருக்கின்றாள்). இளமைமிகுந்த பெட்டை அன்னங்களோடு ஆணன்னங்கள்விளையாடுகின்ற முன்னிடத்தைப்பார்த்து அவ்விடத்துக்குப்பக்கத்தில் நின்றார் எ—று."

"உபமானத்திற்கேற்ப உபமேயம் வருவிக்கப்பட்டது. 'கழிபேடோடன்னமாடும்' என்பதை உபமேயமாகக்கொள்ளலாகாதோவெனின், சீதாபிராட்டி வீற்றிருத்தலை யாண்டு மோதாமையானும், 'அன்றம்மாடத்தும்பரிக்கும் மழ நன்னாள்' என்று இம்மாடத்தைச் சுட்டிக்கூறினமையானும் அன்னத்தைக்கொள்ளலாகாதென்க" ஸ்ரீ-துரைசாமிமூப்பனார்.

"பொன்னின்சோதியை, நாற்றத்தை, சுவையை, இன்பத்தை முன்றுறைக்கு அயல்மாடத்து உம்பரின்மாடே கண்டு நின்றார் என்க. சோதி, நாற்றம், சுவை, இன்பம் என்னும் நான்கும் சீதையைச்சுட்டி நின்றன. 'பொன்னினொளி பூவின்வெறி சந்துபொதிசீதம்—மின்னினிழலன்னவள்' என்பர் பின்னும் (கோலங்காண்—உஅ). "அன்னமாடுறையுளுக் கருகுநின் றுளைபக்—கன்னிமாடத்திடைக்கண்டதும்" என்

பர் பின்னும் (நாடவிட்ட—௬௭). ஸ்ரீ-அ. குமாரசுவாமிப்பிள்ளை ஸ்ரீ-த. கனகசுந்தரம்பிள்ளை.

இங்கே சீதாதேவியை விசுவாமித்திரமுனிவரும் இராமலக்குமணரும் பார்த்தபார்வை சாதாரணமாக ஒருவரை ஒருவர் பார்க்கும் பொதுப் பார்வையென்பதும், இதன்பின் இத்திரட்டில் 110-ம் பாட்டில் "அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்" என்ற இடத்தில் இராமபிரானும் சீதாபிராட்டியும் ஒருவரையொருவர் பார்த்தபார்வை காதற்பார்வையென்பதும் கவனிக்கத்தக்கவை.

கவி, கதாநாயகிக்கு உவமானமாகக் கூறியபொருள்களெல்லாம் மிக இனியபொருள்களிற் சிறந்தவைகளாயிருப்பதும், அவைகளை அடுக்கிக் கூறி முடிவில் அவற்றின் மகுடமாகச் 'செஞ்சொற்கவியின்பத்தைக் கூறியிருப்பதும், சொல்நயம், பொருள்நயம் ஒருங்கமைந்து இனிமை மிகுந்த அரியகவிகளை ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்து அனுபவித்து ஆனந்திக்கும் அறிவாளர்க்கு அளவிறந்த அகமகிழ்ச்சியை அளிப்பனவாம். இதுவரையும் மிதிலைநகரிலே பல இனியகாட்சிகளைக்கண்டு கொண்டு ஓரிடத்தும் நில்லாமற் சென்றவர்கள், இப்போது சீதாபிராட்டியைக்கண்ட காட்சிநிகழ்ந்த இடத்தில் நின்றாரென்றதனால், அந்தக் காட்சி தன்னைக் காணலுற்றார் அவசமாய்ப் பிரமித்து நிற்கச்செய்யும் நனியினிய அதியற்புதக்காட்சியாமென உய்த்துணரவைத்தார்; அன்றி, நின்றவர் சென்றாரென்றால், சென்றவர்காணும் வேறுகாட்சிகள் கூறற்பாலனவாய், இப்போது பிண்டமாகக்கூறிய கதாநாயகிவருணனை விரிவாய்க் கூறற்கியலாததாமாதலால், அவ்வாறு விரித்துக்கூறுதற்கு அவகாசம் அமைத்துக்கோடலும் செய்தாரென்க.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

# இரண்டாம் ராஜாதிராஜன்.

(All Rights Reserved).

மத்தியகால சோழவரசர்பரம்பரையிலே விஜயாலயன்முதல் மூன்ரும் ராஜேந்திரன்வரை 24 தலைமுறைகள் சோழஅரசர்கள் ஆண்டதாகக் கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள்மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ராசாங்கச் சிலாசோதகர்கள் அவ்வவ்வருடத்திற் கண்டெழுதும் சாசனங்களின் முடிவை யப்படியப்படித் துண்டுதுண்டாக எழுதினர்களேயன்றிக் கோவைப்பட எழுதினர்களில்லை. அப்படிச் சிதறுண்டுகிடந்த விடயங்களை வரிசையாகக் கிரமப்படுத்தினர் இருவராவர். அவர்களுள் இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகச் சரித்திரப்பேராசிரியராயிருக்கும் ஸ்ரீமத்: Dr. எஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் ஒருவர். இவர்கள் வெகுகாலத்துக்குமுன்னரே தென்னிந்தியாவில் சோழராஜ்யம் ["The Chola Empire in South India"] என்ற தலைப்போடு ஆங்கிலத்தில் ஒரு உரைநடை எழுதிவெளியிட்டுள்ளார்கள். மற்றொருவர் சென்னை அரசாங்கத்தில் உதவிக் கல்வெட்டுப் பரிசோதகராயும் பின்னர்த் திருவாங்கூர்ராஜ்ய சிலாசாசனபரிசோதகராயுமிருந்த T. A. கோபிநாதராயரவர்களாவர். இவர் 'செந்தமிழ்' வாயிலாகவே சோழவம்ச சரித்திரச்சுருக்கம் என ஒன்று எழுதி அதனிறுதியிலே அவரவர்களது சரித்திரங்களைவிளக்கும் மெய்க்கீர்த்திகளில் ஒவ்வொன்றும் சேர்த்து வெளியிட்டுள்ளார். இவைகளே இப்பொழுது தமிழகத்தில் மத்தியகால சோழவரசர்பரம்பரைகளைக்கூறும் ஒழுங்கான நூல்களாம்.

இவ்விருநூல்களும் தொகுத்துச் சுருங்கக்கூறு நூல்களாகையாற் சில அரசர்கட்குப்பின் சில அரசர்கள் நேர்முறையில் எவ்வாறு வந்தனரென்று சொல்லவில்லை. அன்றியும், அதற்குற்ற ஆதாரங்களும் சாதனங்களும் இன்னும் போதுமானபடி அகப்படவுமில்லை. உதாரணமாக, விஜயாலயன்வமிசத்தார் வீரராஜேந்திரனவரையில் ஆண்டிருக்க இவ்வீரராஜேந்திரனுக்குத் "தயரதத்தனபுடைமக்களிருக்கக்"* கிழைச்சளுக்

* S. I. I. Vol. III.

கிய வமிசத்தானுன ராஜேந்திரனெனும் குலோத்துங்கன் எவ்வாறு சோழசிங்காதனமடைந்தனன் என்று விளக்கமாகக் கூறப்படவில்லை.

கலிங்கத்துப்பரணியிலே,

"ஒருகளிற்றின்மேல்வருகளிற்றையொத்
துலகுயக்கொளப்பொருதுகொப்பையிற்
பொருகளத்திலேமுடிகவித்தவன்
புவிகவிப்பதோர்குடைகவித்ததும்" ×27.

என்பது ராஜேந்திரசோழன் மகனுகிய ராஜேந்திரனே. இவன் ராஜராஜ னென்று முடிசூட்டப்பட்டான் † இவனுக்குப்பின்னர்,

"பனுவலுக்குமுதலாயவேதநான்கிற்
பண்டுரைத்தநெறிபுதுக்கிப்பழையர்தங்கள்
மனுவினுக்குமும்மடிநான்மடியாஞ்சோழன்
மதிக்குடைக்கீழறந்தளிர்ப்பவளர்த்தவாறும்" ×28.

என்று காணப்படுகிறது. இதன் பொருளாவது:- "நூல்கட்கெல்லாம் தலையாய இருக்கு, யசுசு, சாமம், அதர்வணமென்கின்ற வேதங்கள் நான்கிலும் முற்காலத்திற்சொல்லிய முறைப்படி அரசாட்சிவிளங்கச் செங்கோல்செலுத்திப் பழையர்குடியில்வந்த பாண்டியர்க்கு அரசனுக இருக்கும்(பழையர் ‡ தங்கள் மனுவினுக்கு) மும்மடிச்சோழன் $ அரசுகட்டிலேறினகாலத்து நான்மடிச்சோழனுகி, அவனது வெள்ளிதான குடை நிழலிலே தருமநெறிபிறழாது நடந்தவிதமும்" என்பதாம். இவனே ராஜமகேந்திரனென்றும், இவன் ராஜேந்திரனதுமகனென்றும் டாக்டர் ஹுல்ஷ்துரை முதன்முதலாகக் கூறினுர். ¶ அவரைப் பின்பற்றியே மற்றையோரும் கூறிச்சென்றனர்.

ராஜேந்திரன் என்னும் இரண்டாம் ராஜராஜனது அச்சிட்ட மணிமங்கலத்துக் கல்வெட்டொன்று,..........."திண்கலிபெயர்த்து, தன்சிறிய

---

† S. I. I. Vol. III. P. 33. இவனே இரண்டாம் ராஜராஜனேன்று சொல்லவேண்டும்.

‡ பழையன்மாறன் என்பதுபோன்ற தொடர்களை நோக்குக.

$ IB.ID. P. 60 Line 2.

¶ S. I. I. Vol. III. P. 196.

தாதையாகிய எறிவலி கங்கைகொண்டசோழனைப் பொங்கிகல் இருமடிச் சோழனென்றும், பெருமுரட்டன் தன்திருத்தம்பியர்தம்முள் வென்றி கொள் மும்மடிச்சோழனை தெம்முனையடுதிறற் சோழபாண்டியனென்றும் கோழிமன்ருேடுகழல் வீரசோழனைப் படிபுகழ்கரிகாலச்சோழனென்றும், பொருதொழில் வாள்வலித்தடக்கை மதுராந்தகனைச் சோழகங்கனென் றும்தோள்வலிமேவு இகல்பராந்தகதேவனைச்சோழவயோத்தியராஜனென் றும், தயரதத்தன்பொடு கருதுகாதலருள் இத்தலம்புகழ் ராஜேந்திர சோழனை உத்தமசோழனென்றும், கொத்தணி முகையவிழலங்கல் முடி கொண்டசோழனைச் சுந்தரசோழனென்றுஞ், செந்தமிழ்ப்பிடி கவிரட்ட பாடிகொண்ட சோழனைத் தொல்புவியாளுடைச் சோழகன்னகுச்சிய ராஜ னென்றும்*" என்று கூறுவதாலே, இவ்வரசனது (ராஜேந்திரனது) இளவலான மும்மடிச்சோழனே பாண்டிநாட்டிலே சோழப்பிரதிநிதியாக விருந்து அரசாட்சிசெய்து, பின்னர் நான்மடிச்சோழன் என்றபேரோடு அரசாண்டனன் என்பது விளங்கும். இதுவே கலிங்கத்துப்பரணிக் கும் ஒற்றுமையுடையதாகக் காணப்படுகிறது.

இவனுக்குப்பின்னர் அரசாண்டவனைக் கூறும்போது, கலிங்கத் துப்பரணியில்,

"குந்தளரைக்கூடற்சங்கமத்துவென்ற
கோனபயன்குவலயங்காத்தளித்தபின்னை
யிந்தநிலக்குலப்பாவையிவன்பாற்சேர
வென்னதவஞ்செய்திருந்தாளென்னத்தோன்றி" X ?9.

என்று காணப்படுகிறது.

குந்தளரைக் கூடற்சங்கமத்து வென்றவன் வீரராஜேந்திரனுவான். இவனே வீரசோழன், வளவநாராயணன், விக்கிரமசோழன் எனப் பல பேர் படைத்தவன். வீரசோழியம் என்றநூல் இவன் பேராலே செய் யப்பட்டது. இவன் ராஜேந்திரனது இரண்டாவது தம்பி என்பது முன்னர்க்காட்டிய மணிமங்கலத்துக் கல்வெட்டாற் பெறப்படுகிறது.

---

* S. I. I. Vol. III. No. 29.

இந்தச்செய்யுளின் பின்னடியிற்கண்டவனைப்பற்றி இப்பொழுது ஒன்றும் திட்டமாய்ச் சொல்வதற்கில்லை. இவனைப்பற்றியும் இவ்வடியைப்பற்றியும் ஆராய்ந்து சொல்லவேண்டியிருக்கிறது. இதற்குமேலுள்ள 32-வது செய்யுளில்,

"எழுதிமற்றதுரைசெய்தவர்கள்செய்பிழையெலா
மெமர்பொறுக்கவெனவிப்படிமுடித்தவிதனைத்
தொழுதுகற்றனமெனத்தொழுதுசொல்லுமளவிற்
சோழவம்சமிதுசொன்னவறிவென்னவழகோ"

என்று காணப்படுகிறதுகொண்டு சுத்தசோழவமிசமான விஜயாலயன் வமிசம் முடிவுபெற்றதெனலாம்.

இனி, கீழைச்சளுக்கியான குலோத்துங்கன் எவ்வாறு சோழஅரசு கட்டிலேறினன் என்பதற்கு இதுவரை போதுமான ஆதாரமொன்றுங் கேட்டிலேம். முன்னர்க் கூறியதுபோலவே, இச் சோழசளுக்கியான* குலோத்துங்கனது வம்சமும் இரண்டாம்ராஜராஜனென்று இப்பொழுது வழங்கிவரும் திரிபுவனசக்கரவர்த்திகள் ராஜராஜனோடு முடிவடைந்ததாகக் காணப்படுகிறது. இத் திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜராஜ தேவர்க்குப்பின்னர் ராஜாதிராஜனென ஒருவன் அரசாண்டனனென்றும், அவனுக்கடுத்தவனே மூன்றுங்குலோத்துங்கனென்றும் சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

ராஜாதிராஜனைப்பற்றி இதுவரை யாதொன்றும் திட்டமாகத் தெரியவில்லை என்று கோபிநாதராயரவர்கள் தமது சோழவமிச சரித்திரத்தில் நன்கு கூறிப்போந்தனர். சிலாசாசனபரிசோதகர்களோ இவன் ராஜராஜனுக்குத் தம்பியாக விருக்கக்கூடுமென ஊகிப்பதாகச் சரித்திர ஆசிரியநண்பரொருவர்மூலமாக வறிந்தேன். டாக்டர் ஹுல்ஷ் தேன் இந்தியக்கல்வெட்டுக்கள் மூன்றுந்தொகுதியில் (பக். 206)பின்வருமாறு எழுதுகிறார்:—

*குலோத்துங்கன் கீழைச்சளுக்கியான ராஜராஜனைத் தகப்பனாகவும் கங்கைகொண்டசோழனதுமகன்வயிற்றுப்பெண்ணைத் தாயாகவும் உடையவனாகையால் இவனைச் சோழசளுக்கி என்றும்,

i. 1898–99-ம் ஆண்டு விண்ணப்பபத்திரத்தில், திருவாளர் வெங்கையா அவர்கள், (இலங்கைச் சரிதத்தைக்கூறும்) மஹாவமிசம் 76, 77-வது பகுதியிற் கூறப்பட்ட இலங்கையதிபன் பராக்கிரமபாஹுவின் மதுரைப்படையெடுப்பு இரண்டாம் ராஜாராஜனுடைய ஆட்சியில் ஏற்படுகிறதென்று காட்டியிருக்கின்றார். இந்தப்போரில் மதுரை ஆட்சிக்கு இருவர் நின்றனர். அவருள், பராக்கிரமபாண்டியனின் புதல்வனான வீரபாண்டியன் சிங்களரால் உதவிசெய்யப்பட்டுநிற்க, குலசேகரன் சோழர்களது உதவியைப் பெற்றான். மூன்றாங்குலோத்துங்கனால், தோற்கடிக்கப்பட்டு அவமானமடைந்த வீரபாண்டியனாகவே இவன் இருக்கலாமென்றும், ராஜாதிராஜனால் உதவிசெய்யப்பட்டவனும், குலசேகரதேவனது பின்னோனும், மூன்றாங்குலோத்துங்கனின் உதவியை அடைந்தவனும் விக்கிரமபாண்டியனா யிருக்கலாமென்றும் திருவன் வெங்கையா சொல்வது தகுதியாக விருக்கலாம்.

ii. மேலேகூறியவை ஒப்புக்கொள்ளப்படுமானால், சோழ அரசர்களில் ராஜாதிராஜன் மூன்றாங்குலோத்துங்கனுக்குமுன் அடுத்து ஆண்டவனென்றாவது முன்னோர்களில் ஒருவனென்றாவது ஏற்படும். இவர்கள் இருவரும் (குலோத்துங்கன் III-ம் இராஜாதிராஜனும்) ஒருவருடன் ஒருவர் சேர்ந்தவர்களென்பது மூன்றாங்குலோத்துங்கனின் 17-ம் ஆண்டுக் கல்வெட்டொன்றின் முதலும், ராஜகேசரிவர்மன் திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜாதிராஜனுடைய ஏழாம் ஆண்டுக்கல்வெட்டின் (262 of 1902) மெய்க்கீர்த்தியும் ஒன்றாயிருப்பதுகொண்டு தெளியப்படும். இவ்விருஅரசர்களையும் இணைக்கும் மற்றொரு குறிப்புப் பின்வருமாறு:— இவ்விராஜகேசரிவர்மன் ராஜாதிராஜதேவனின் 11-ம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் (3 of 1899) கடல்சூழ்ந்த பார்மாதரும் என்று ஆரம்பித்து மதுரையும் ஈழமுங்கொண்டருளின என்று காணப்படுவது பின்னரும் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தியிலும் காணப்படுகிறது.

iii. "கடல்சூழ்ந்த பார்மாதரும்" என்று ஆரம்பமாகும் 6 கல்வெட்டுக்களில் 4-ல் இவன் ராஜகேசரிவர்மன் என்றழைக்கப்படாமல், பரகேசரிவர்மனெனப்படுகிறான். இந்நான்கினுள் ஒன்றில் ராஜாதிராஜனுடைய 8-ம் ஆண்டு இரண்டாம் ராஜாராஜனுடைய 19-ம்* வரு

---

*One of these 4 inscriptions shows that the 8th year of Rajadhi Raja II was about 15 years later than the 19th year of Raja Raja II, as will appear from the following extract.

ஷத்திற்குச் சரிபென்றும், அதாவது 15 வருடம் பின்னென்றும் காட்டும். அது,

"1. ஸ்வஸ்திஸ்ரீ கடல்சூழ்ந்த பார்மாதரும்...........கோபரகேசரி பன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜதேவற்குயாண்டு (எட்டாவது) அவது கார்த்திகைமாஸத்து முதற்றியதி நாள் உடையார் (உ) ராஜாதிராஜதேவற்கு யாண்டு ௰ (கூ) † வது தைமாஸமுதல், திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜாதிராஜதேவற்கு யாண்டு 8-வது ஐப்பிசி மாசம்வரை யாண்டு பதினஞ்சில்."‡ என்பதாம்.

iv. "ஆகையால் ராஜாராஜன் II ராஜாதிராஜன் II-க்கு முன் அடுத்தவனுகவாவது முற்பட்டவர்களில் ஒருவனுகவாவது இருக்க வேண்டும்" ஆகவே யான் முன்னர்க்குறித்தபடி ராஜாதிராஜனைப்பற்றியவை ஊகமேயாம்.

ஆயினும் சேதுஸமஸ்தானவித்வானுன ஸ்ரீ உ. வே. இராகவ ஐயங்காரவர்கள் தமது "'கூத்தரும் குலோத்துங்கன்கோவையும்' என்ற ஆராய்ச்சியில் (செந்தமிழ்த்தொகுதி III) சங்கரசோழனுலாவில், சங்கமன் என்பானுக்கு நல்லமன் குமாரமகீதரன், சங்கரன் எனப்பட்ட மூவரும் புதல்வராவார்" என்றுர்கள். மேல் "முன்னுயகரில் அவன் .........தவம்போல்" எனக் கூத்தர்பாடிய மூன்றுவதுலாப்பெற்ற ராஜராஜன்முதலாகிய பலர்க்குப்பின்னே, சங்கமராசனைக்கூறி அவனுக்குப் புதல்வர் மூவரென்றுகூறிச் சென்றுர்கள்; அவர்கள் எடுத்துக்கொண்ட விடயம் இதுவல்லவாகையான் இதுபற்றியவர்கள் ஆராய்ந்தார்களில்லை எனல்வேண்டும்.

---

† கூ என்பது ஹுல்ஷ்துரையால் பூர்த்திசெய்யப்பட்டது. 15 வருடம்முர்தியதென்றிருக்கவேண்டும் என்பதைப் பின்னர்க் காட்டுவேன்.

‡ ராஜாதிராஜன் இரண்டாம் ராஜராஜனுடைய எட்டாம் ஆண்டில் அரசாளத்தொடங்கினுன்; ஆயினும், இவன் ராஜராஜன் இறந்த 4 ஆண்டு கழித்தே பட்டாபிஷேகம் செய்யப்பட்டதால் இச் சாஸனத்திற்கண்ட வருடங்கள் முறையுடையனவே. ராஜாதிராஜனுடைய பட்டாபிஷேகஆண்டு ராஜராஜனுடைய 12-ம்ஆண்டாகையால் அதிலிருந்துஎட்டாண்டுக்குப் பத்தொன்பதாண்டாகும்; ஆனுலும் முன் 19-ல் ஒன்பது என்று ஹுல்ஷ்துரையால் பூர்த்திசெய்யப்பட்டிருப்பது பின் காணும் 15 கொண்டும் இனி எழுதப்பெறும் கல்வெட்டுக்கொண்டும் 15 என்றே இருக்கவேண்டும்.

இனி, முற்கூறிய சங்கரசோழனுலாவிலே,

கூடியசீர் தந்தவென்றெடுத்தகூத்தனுலாச்
சூட்டியவிக்கிரமசோழனும்— பாடிய
வெள்ளைக்கலியுலாமாலையொடுமீண்டுமவன்
பிள்ளைத்தமிழ்மாலைபெற்றோனும்— தெள்ளித்தம்
முன்னுயகரிலவன்மூதுலாக்கண்ணிதொறும்
பொன்னுயிரஞ்சொரிந்தபூபதியு— மென்னுமிவர்
மாசக்ரமேருவலஞ்சென்மகரசல
பூசக்ரமேழும்புரந்ததற்பின்— நேசம்
... ... ... ... ...
பணியுமநுகுலம்பாற்கடலீன்ற
மணியுமமுதமுமானக்— குணபா
லுவந்தவளவர்குலவசலத்துச்சி
நிவந்தபரிதிநிகர்ப்ப— அவந்திமன்
வங்கமன்கங்கமன்ஞதித்தன்வந்தித்த
சங்கமன்றொல்லைத்தவம்போலப்— பங்கா
யெழுந்திகிரிவெற்பையெனத்திகிரியுந்தன்
செழுந்திகிரியின்றிமிரந்தீர்ப்ப— மொழிந்தனைத்தும்
வல்லவனுதிமனுவினுமேதக்க
நல்லமனென்கின்றநாயகற்குந்— தொல்லை
மலைக்குங்கடற்குநடுமண்முழுதுங்காத்துச்
சிலைக்கும்பாதாளத்தைச்சீறித்— தொலைத்துப்
பருந்துநிழற்பந்தர்ப்பல்லாயிரம்பேய்
விருந்துகளிப்பவிடுத்துக்— கருந்தலையின்
குன்றுகுவித்துக்குவித்தபிணக்குவடு
சென்றுகுருதித்திரைமிதிப்ப— வென்றதற்பின்
பைத்தபொருபுலியைப்பல்கோடிவேந்தணிய
வைத்தகுமாரமகீதரற்கு— மெய்த்துணையாத்
தோற்றியசங்கரராசன்."

என்று காணப்படுகிறது. 'சீர்தந்த' என்ற தலைப்பையுடைய உலா வைப்பெற்றவன் விக்கிரமசோழன். உலா, மாலை, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைப்பெற்றவன் இரண்டாங்குலோத்துங்கன். கண்ணியொன்றிற் காயிரம்பொன்கொடுத்தவன் ராஜராஜன். இப்படி இவர்கள் திரிபுவனசக்கரவர்த்திகளாய்ப் பூசக்ரம் நடாத்தியபிறகு, வளவர்குலத் தலைவனான, சூரியனை நிகர்த்த, அவந்திநாட்டரசன், வங்கதேசாதிபதி, கங்கநாடாள்வானான ஆதித்தன்முதலாயினர் போற்றும் சங்கமன் என்னும் இயற்பெயரினை யுடையோன்; வல்லவன்; ஆதிமனுவைவிடமேலான நல்லவரசன் என்று பேர்பெற்றவர்க்கும் அவன்மகனான குமாரமகீதரற்கும் துணையாய் நின்றவன் சங்கரன் என்று காணப்படுகிறது.

இக்குமாரமகீதரன் குமாரகுலோத்துங்கன் என்றும், மகீதரனென்றும், சங்கமராஜகுலோத்துங்கனென்றும் வழங்கப்படுவான் என்பது குலோத்துங்கன்கோவையை வாசிப்பார்க்குப் புலனாம். அவற்றிற் சில காட்டுதும்.—

" கூனுஞ்சிலைக்கைக்குமாரகுலோத்துங்கன்கோழிவெற்பில்" 38

" வாமாநகுலன்குமாரகுலோத்துங்கன்வாழுறந்தை" 53

" களத்தோடினரைக்கொல்லேனெனுஞ்சொற்குமாரகுலோத்துங்கன்" 89

" சங்கமராஜகுலோத்துங்கன்சோழன்வெற்பில்" 40

"சங்கமராசகுலோத்துங்கன் கோழிவெற்பில்" 41

" அண்டமெலாங் கோனுகுஞ்சங்கமன்முன்னோன்குலோத்துங்கன்" 42

என்பனஆதியவாம். உலாவிற்கண்ட குமாரமகீதரனும் கோவையிற்கண்ட குலோத்துங்கனும் ஒருவனே என்பது வெகுகாலமுன்னரே தீர்மானிக்கப்பட்டது. (செந்தமிழ் III) இவன் குலோத்துங்கன் என்னும் பேர் தரித்தவரசர்களில் மூன்றாமவன். இந்த மூன்றாங்குலோத்துங்கனுக்கும் இரண்டாங்குலோத்துங்கனுக்கும் நடுவே இரண்டாங்குலோத்துங்கனுக்குப்பிறகு இராசராசன் ஆண்டானென்று ராஜராஜதேவருலாவாலும், சங்கரசோழனுலாவாலும்பெறுவதோடு, இவனுக்குப்பின்னர்ச் சங்கமராசனென் றொருவன் ஆண்டனனென்று சங்கரசோழனுலாவாலும் பெறுகின்றோம். இவன் யாரென ஆராயவேண்டுவதுதான் நமது முக்கியநோக்கமாகும்.

தமிழ்நூல்களிற்கூறிய சரித்திரங்களெல்லாம் உண்மைக்குமாறுன தல்லவென்று இப்பொழுது தெரிந்துவருவதால் இச் சரிதவிடயமும் தவறாகக்காண நிபதியில்லை. டாக்டர் ஹல்ஷ் துரையும் குலோத்துங் கனையடுத்தோ அவற்குமுன்னே ராஜாதிராஜனென ஒருவன்ஆண்டிருக்க வேண்டுமென்றும், அவனுக்கு முன்றான் ராஜராஜன் ஆண்டிருக்கவேண்டு மென்றும் ஊகித்துள்ளார்களென முன்னர்க் காட்டினும். சங்கரசோழ னுலா இவ்விடயத்தில் நமக்குப் பெரிதும் உபகாரமாகநிற்கிறது; எனி னும், இதனில் பூசக்ரமேழும் புரந்ததற்பின் என்ற பகுதிக்குப் பின் னர்ச் சில அடிகள் ஏட்டிற் சிதைந்திருக்கவேண்டுமென ஊகிக்கவேண்டி யிருக்கிறது அவ்விடத்தில், பொருள சரிவரப் பொருந்துமாறில்லை எனபதை ஊன்றிநோக்கவேண்டுகிறேன். உலாவில் சங்கமராசன் என் றும் கல்வெட்டுக்களில் ராஜாதிராஜனென்றும் இருக்கும் பேர்வேற்று மையை பொற்றுமைப்படுத்த யான்கண்ட *பல்லவராயப்பட்டுக்கல்வெட் டுப் பெரிதும் பிரயோஜனமாகிறது.

அன்றி, ராஜராஜனும் ராஜாதிராஜனும் சகோதரர்கள் எனக் கல் வெட்டுப் பரிசோதகர்கள் கொள்வது ஏலாதோவெனில், இவர்கள் சகோ தரர்களாயின், அங்ஙனமே கல்வெட்டுக்கள் கூறும். இதற்கு ஆதாரம் இவ்வுரைநடையின் முதலில் ராஜேந்திரனது கல்வெட்டுக்களிலிருந்து காட்டப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாவிட்டாலும் குலோத்துங்க சோழனுலாவிலே, இக் குலோத்துங்கனுக்குப் பலபிள்ளைகளிருந்தன வென்று படித்தோமில்லை. அல்லது ராசராசதேவருலாவாவது சங்கர சோழனுலாவைப்போன்று உதவிசெயயத்தகுந்த துணைவனெருவன் இருந்தானென்று கூறவுமில்லை. இவைகளாலும் யான்கண்ட பல்லவ ராயப்பட்டுக் கல்வெட்டினுலும் இது பொருந்துமாறில்லை என்பது ஒருதலை.

இப்பல்லவராயப்பட்டுக் கல்வெட்டினுல் ராஜராஜனுக்குப் பட்ட மெய்துவதற்குமுன் இவனதுபாட்டனை விக்கிரமன்பேர் இடப்பட் டிருந்ததென்றும் இவன் எரிந்து கோயிற்கண் (அரண்மனையில்) கிடந்தா னென்றும், கலியாணமாகாது இறந்தானென்றும், இறக்குமுனனர்,

* இது மாயூரத்துக்கு வடக்கே ஒருமைல் தூரத்திலுள்ளதொரு ஊர். இக் கல்வெட்டுமுழுவதும் எடுத்தபிறகு வெளியிடப்படும்.

எரிந்துகோயிற்கிடந்தபொழுது இறை ஆகும்படி தனது மாபெருந் தண்டநாயகனுன திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பிக்குக் கட்டளேயிட்டானென்றும், இறக்கையில் அத்தண்டநாயகனேக்கொண்டே சோழவமிசத்திலேயே ஒருபிள்ளையைக்கொண்டுவந்து திருஅபிஷேகம் பண்ணுவிக்கும்படிக்கும், அவனுக்கு ராஜாதிராஜனென்று பட்டமிடும் படிக்கும், கட்டளேயிட்டானென்றும் தெரிகிறது. இதனோடு நில்லாது பாண்டியநாட்டுக் குலசேகரதேவர் பாண்டிய அரசாட்சியைத் தான் அடைவதன்பொருட்டு உதவிவேண்டியதும் விளங்க வெட்டப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு இடையிடையே சிதைந்திருந்தபோதிலும் வேண்டிய அளவு விடயங்கள் காணப்படுகின்றன.

இனி இக்கல்வெட்டிற்கூறிய ராசராசதேவர் இவர்தான் என்பதும், ராஜாதிராஜதேவர் இவர் பின்னவர்தானென்பதும், இவ்விருவருடைய கல்வெட்டுக்களும் ஒரேமெய்கீர்த்தியோடு காணப்படுகின்றனவென்று டாக்டர் ஹுல்ஷ்சொல்லுவதாலும், அவர்கொடுத்த சாசனமொன்றுல் இவ்விராஜாதிராஜன் அரசாட்சி ராஜராஜனுக்கு எட்டு வருடம் கழித்து என்று காணப்படுவது பல்லவராயப்பட்டுக்கல்வெட்டால் நிச்சயப்படுவதாலும் தெளியலாம். மேலும், இவ்விராசராசனது பதிப்பிக்கப்பட்ட கல்வெட்டொன்றைக் கீழே குறிக்கிறேன்.

"பூமருவியதிருமாதும் புவிமாதும் ஜயமாதும், நாமருவிய கலேமாதும் புகழ்மாதும் நயந்துபுல்க, அருமறைவிதியனேத்தும் அருந்தமிழும் தனிதழைப்ப, வருமறை உரிமையின் மணிமுடி சூடித், திங்கள் வெண்குடைத் திசைக்களிறெட்டுந், தங்குதனித்திடந்தானென விளங்கக், கருங்கலிப்பட்டிபைச் செங்கோல்வரப்ப, பொருவலியாழி புவிவளர்ந்துடன்வர, வில்லவர் தெலுங்கர் மீனவர், சிங்களர், பல்லவர் முதலிய பார்த்திவர் பணிய, எண்ணருங்கற்ப மண்ணகம் புணர்ந்து, செம்பொன் வீரஸிம்ஹாஸநத்து உலகுடை முக்கோக்கிழானடிகளொடும் வீற்றிருந்தருளிய கோ பரகேசரிபன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ-ராஜராஜதேவற்கு யாண்டு எட்டாவது (S. I. I. III. 79.)

யான்கண்ட இவனுடைய பத்தாம்வருடக்கல்வெட்டுப் பின்வருமாறு:—

ஸ்வஸ்திஸ்ரீ பூமருவியதிருமாதும்புவிமாதும்ஜயமாதும், நாமருவிய கலேமாதும் புகழ்மாதும் நயந்துபுல்க, அருமறை நெறி விதியனைத்து

மருந்தமிழுந் தனிதழைப்ப, வருமுறை உரிமையில் மணிமுடி சூடித், திங்கள் வெண்குடைத்திசைக்களிறெட்டுங், தங்குதனித் திடந்தானென விளங்கக், கருங்கலிப்பட்டியைச் செங்கோல் துரப்பப், பொருது கதிராழ் புவிவளர்ந்து மாதுடன்வர, வில்லவ, ரிரட்டர், மீனவர், சிங்களர், பல்லவர் முதலிய பார்த்திபர் பணிய, எண்ணருங்கற்ப மண்ணகம் புணர்ந்து (இதன்மேல் உள்ள கல்லில் ஒருபாகம் வெட்டிஎடுக்கப்பட்டிருக்கிறது. மேலே) வம்மரான திரிபுவந சக்ரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு பத்தாவது, ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்றநாட்டுக் காரிகைகுளத்தூர் மான் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பியானேன் ராஜ ராஜ வளநாட்டுத் திருவிந்தளூர்நாட்டுக் குளத்தூரி (உ)ல் எழுந்தருளிவித்த உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார் என........"

என்று போகிறது. இக்கல்லெட்டு வெட்டியிருக்கும் இடத்திற்கு மேல் புறமாகவுள்ள ராஜராஜனது எட்டாம் வருஷத்ததாகக் காணப்படும் கல்வெட்டைக் (கிடைத்தவரை கீழே குறிக்கிறேன்.

(வரி 4)"வீரஸிம்ஹாஸநத்து உலகுடை முக்கோக்கிழானடிகளொடும் வீற்றிருந்தருளிய கோராஜகேசரி பன்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவற்கு யாண்டுஎட்டாவது (5) ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்றநாட்டுக் காரிகைக் குளத்தூருடையான் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பியான பல்லவ (6) ராயர் பெரியதேவர் ராஜராஜதேவர் எரிந்து கோயிற் கிடந்தும் அவர்க்குத் திறை ஆம்படி நியாயம் உள்ளிட்டதுறைகளுக்குமாய் முதலிகள்..................காரியத்துக்கும் (7) கடவமாய்; எ(ல்)லா வரிசைகளும் முன் எ (ன்) கிளை உள்ளிட இமுதலிகள் பெறக்கடவ வற்றங்களும் பெற்றுநின்று பேசிவித்தருளி பிள்ளை ஒன்று கோடுபோந்து [8-9 வரிகள் உடைந்து சிதைந்துவிட்டன] (10) வேண்டியபத்து.... ..........................தேவர் சீவித்தநாளிலே திருஅபிஷேகத்துக்கு உரியன பிள்ளைகள் இன்றி உடையார் விக்கிரமதேவர் போனர், (11) னட்டிலே...................ரக்குமுன் நாளிலே காரியமும் இருநதபடி............ ...,.......செய்து கங்கைகொண்ட சோ(ழர்)அருளி..... .............இருக்கிற பிள்ளை..................(12) நெறி உடைபெரும்......................திருமகனர் எதிரி மேருமா...பேரி....இந்தப்படி அருளினநாளிலே பண்டைநாளில் இருந்தவாறே இவரைத் திருஅபிஷேகம் பண்ணுவிக்கக் கடவராக. நாலாந்திருநக்ஷத்திரத்திலே ராஜாதிராஜதேவர் எ(13)ன்று திருஅபிஷேகம் பண்ணுவித்து உடன் கூட்டமும் நாடும்....................ய பட்டஇச்செல்லும்படி..............."

என்று காணப்படுகிறது. இக்கல்வெட்டிலிருந்து இந்த ராஜாதிராஜன் ராஜராஜனுடைய எட்டாம்வருடத்தில் அரசாளத்தொடங்கினனென்

றும், இவன் ராஜராஜனுக்கு ஒருவிதத்திலும் உறவுடையவனல்லவென்றும் இவன் ராஜராஜன் இறந்த 1-வது வருஷத்தில் முடிசூட்டப்பட்டான் என்றும் தெரியவருகிறது. இந்த நாலுவருஷம்வரையிலும் ராஜராஜதேவர்பேராலேயே ஆண்டுவந்தனன் என்பதும் மற்றொரு கல்வெட்டாலும் அறிகிறோம். கல்வெட்டைக்கொண்டு இவனது இயற்பெயர் அறியமுடியாவிடினும், உலா, கோவை முதலிய நூல்களால் இவனது இயற்பெயர் சங்கமன் என்று அறியக்கிடக்கின்றது. இவனே ராஜாதிராஜனெனப் பட்டஞ்சூடினன் என்பதற்கு இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள இவ்விரு அரசர்களது கல்வெட்டுக்களும் ஹூல்ஷ்துரையவர்களது அபிப்பிராயமுமே போதியதாம்.

இவைகளைத்தவிர்த்துப்பாண்டிய அரசனான குலசேகரதேவர்காலத்தில் அவர் பாண்டியநாட்டிலிருந்து துரத்தப்பட்டார் என்ற மேலே குறிக்கப்பட்ட மகாவமிசச்செய்தியும் பல்லவராயப்பட்டுக்கல்வெட்டின் பிற்பாகத்தால் தெரியவருகிறது. அதனில், குலசேகரதேவர் ராஜாதிராஜனது உதவியை வேண்டினரென்றும், அக்காலத்து இந்தத்திருச்சிற்றம்பலமுடையானுக்கே கட்டளைபிறக்க அவனே சென்று இலங்கையிலிருந்துவந்த இலங்காபுரித்தண்டநாயகனைக் கொன்று மதுரைவாசலிலே தைப்பித்ததாகவும் படிக்கிறோம். ஆகவே மேற்கூறிய கூற்றுக்கள் வலிபெறுதல்காண்க.

இன்னும் இச்சோழசளுக்கிவமிசம் இவ்விராஜராஜனோடு முடிவடைந்ததென்பது பல்லவராயப்பட்டுக் கல்வெட்டால் அறியலாவதோடு கம்பர்கூறிய "நின்குலத்தைச் சுட்டதடா என்வாயிற் சொல்" என்னும் அங்கதச்செய்யுளாலும் வலிபெறும். ராஜராஜன் கூத்தரால் உலாப்பெற்றவனாகவே கம்பர் காலத்திருந்தவன் இவனான் என்பதில் ஐயமேற்படக் காரணமில்லை.

இதுகாறும் கூறியதுகொண்டு, ராஜாதிராஜன் சங்கமன் என்னும் இயற்பெயருடையவனென்பதும் நாகபட்டினத்திலிருந்த பழையசோழவமிசத்தானென்பதும்*, விக்கிரமனான ராஜராஜனது விருப்பப்படி சோழசிம்மாசனம் ஏறினனென்பதும், சோழசளுக்கிவமிசமான குலோத்துங்கனது பரம்பரை ராஜராஜனோடு முடிவடைந்தது என்பதும் பெறப்படும்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

---

*நாகபட்டினத்திலிருந்தவனென்பது குலோத்துங்கன்கோவையாலும், நாகபட்டினம் சோழராஜதானியாக விருந்ததென்ற கன்னபரம்பரைச் செய்தியாலும் பெறுவதுடன் இவன் பழையவமிசத்தான் என்பது கல்வெட்டாலும் தெரிகிறது.

உ

# ஓலோகமாதேவீச்சுர சிலாசாசனம்.

இவ்வாலயம், தஞ்சைநகர்க்கு வடக்கில் ஏழுமைல் தூரத்தில், காவிரியாற்றின் வடகரையில், மூவர் திருப்பதிகம்பெற்றுச் சிறந்து விளங்கும் சிவக்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய திருவையாற்றில், ஸ்ரீ அறம் வளர்த்தவம்மையாரோடு வீற்றிருக்கும் ஸ்ரீஐயாறப்பர் ஆலயத்தின் வடக்குத் திருச்சுற்றுமாளிகைக்கண் உள்ளது. இது ஓலோகமாதேவி என்பவரால் எடுப்பிக்கப்பட்டதாகலின், ஓலோகமாதேவீச்சுரம் எனப் பெயர் பெற்றது. இவர், கி. பி. 985 முதல் 1013 வரையில், தஞ்சையின்கண் செங்கோலோச்சியிருந்த-முதலாவது இராஜராஜனது முதற் பெருந்தேவியாவார். இவ்வாலயத்திலுள்ள சாசனம் இவ்வரசனது இருபத்துநான்காம் ஆண்டிற் பொறிக்கப்பட்டதாகலின் இப்பொழுதைக்கு 915 வருடங்கட்கு முற்பட்டதாகும்.

செந்தமிழ்நூல்களிற் காணப்படும் பண்டைக்கால வழக்குகளையும் சரித்திரங்களையும் ஆராய்தற்கண் ஆர்வமுற்றவர்க்குப் பயன்படுதல் காரணமாக இச்சாசனத்தை யான் இங்கு எழுதுகின்றேன்.

ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்னெழில் வளரூழியுள் ளெல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்தேசுகொள்

ஸ்ரீ கோவிராஜகேசரிவன்மராகிய ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு ௨௪ ஆவது ஸ்ரீ ராஜராஜதேவர்நம்பிராட்டியார் தந்திசத்திவிடங்கியா

ரான ஒலோகமஹாதேவியார் வடகரை இராஜேந்திரஸிம்ஹவளநாட்டுப் பொய்கைநாட்டுத் தேவதான திருவையாற்றுப்பால் எடுப்பித்த திருக் கற்றளி ஒலோகமாதேவீஸ்வர முடையார்க்கு இந்நாட்டு மிறைக் கூற்றத்து தேவதானம் கலவாத்தலை ஸ்ஸநப்படி நிலம் எழுபத்து நாலரையே முக்காணிக்கீழ் எழுமாவரை முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமாவும் இந்நாட்டு இக்கூற்றத்து தேவதானம் இளநிலம் இருபத் தாறரையே இரண்டுமாவின் கீழ்மூன்றுமாவின் கீழ்அரைக்காணி முந்திரிகை கீழ் நான்மாவும் இவ் ஒலோகமாதேவீஸ்வர முடைய மஹா தேவர்க்கு இட்டடியில் ஸாஸநத்தில் செய்த நிலநிவந்தங்களும் நெல் நிவந்தங்களும் ஒலோகமாதேவி ஈஸ்வரத்துக் கல்லில் வெட்டுவிக்கவென்று உடன்கூட்டத்ததிகாரஞ்செய்கின்ற கோவலூருடைய......................... ......................அதிகாரி எருதன்குஞ்சரமல்லனும் அருளிச்செய் ஸாஸநப்படி பார்த்து வெட்டுவித்தபடி உலகளந்தகோலால் நூறுகுழி கொண்டது ஒருமாவாகவும் இரண்டாயிரங்குழிகொண்டது வேலியாக வும் அரையே இரண்டுமாக்கொண்டது ஒருபங்காகவும் பெற்றூர்பெற்ற படி நிவந்தக்காரர் கலவாயில் ஸ்ரீவீரநாராயணச் சதுர்வேதிமங்கலத் தார்க்கு நீர்போம் ஸ்ரீகுஞ்சரமல்லவாய்க்காலுக்கு வடக்கே பெறுவார்க்கு இட்டபடி ஆச்சார்ய போகம் பங்கு நாலும் பணிசெய்யும் மாணிகள் அறுவர்க்கு மூன்றும் திருக்களுக்குப் பங்கு அரையும் பதியிலார் ஒருத் திக்குப்பங்கு ஒன்றரையாகப் பதியிலார் முப்பத்திருவர்ப்பங்கு நாற்பத் தெட்டும் நட்டவனுக்குப் பங்கு நாலும் கரணனுக்குப் பங்கு இரண்டும் மெய்ம்மட்டிக்குப் பங்கு இரண்டும் மோரலியனுக்குப் பங்கு இரண்டும் வங்கியனுக்குப் பங்கு இரண்டும் வீணைக்காரனுக்குப் பங்கு இரண்டும் உடுக்கைவாசிப்பானுக்குப் பங்கு இரண்டும் உவச்சுத்தலைப்பறை யொன்றும் மத்தளம் எட்டும் தாளம் ஒன்றும் கரடிகை யொன்றும் கண்டை யாறும் திமிலை யொன்றும் கைம்மணி யொன்றும் சங்கிரண்டும் காளம் நாலும் சேகண்டிகை ஒன்றும் ஆக ஆள் இருபத் தறுவர்க்கு இருகலனே முக்குறுணியாகப் பங்கு பதின்மூன்றரையும் குசவனுக்குப் பங்கு அரையும் வண்ணத்தானுக்குப் பங்கு அரையும் வண்ணானுக்குப் பங்கு அரையும் பிராணஉபகாரிக்குப் பங்கு அரையும் காச்சுவானுக்குப் பங்கு அரையும் கோல்லனுக்குப் பங்கு அரையும் மரத்தச்சனுக்குப் பங்கு அரையும் ஊர்ப்பறையனுக்குப் பங்கு காலும் ஆகப் பங்கு எண்பத்தெட்டேமுக்காலினால் நிலம் ஐம்பத்துமூன்றே காலும் ஸாஸநத்தில் நெல் நிவந்தம் செய்த நிவந்தங்களுக்கு நெல்லோ பாதி நில நிவந்தமாக்குகவென்று அருளிச்செய் நில நிவந்தம் ஆக்கின படி திருவாராதனைசெய்வானுக்கு நிசதம் நெல்லு முக்குறுணிக்குப் பங்கு ஒன்றரையும் தேவர்கரணத்தானுக்கு நிசதம் நெல்லுப்பதக்குக்குப் பங்கொன்றும் நந்தவானக்குடிகள் அறுவர்க்கு நிசதம் நெல்லு தூணி நாழியும் திருமேனிகளும் திருப்பரிகலங்களும் விளக்க புளிக்கு நிசதம் நெல்லு நாழியும் நின்மாலிய நீர் போகட்டுவானுக்கு நிசதம்

நெல்லு முந்நாழியும் ஆக நிசதம் நெல்லு ஐங்குறுணிக்குப் பங்கு இரண்டரையும் அயன சங்கிரமமிரண்டுக்கும் விஷுஸங்கிரம மிரண்டுக்கும் நூற்றெட்டுக்கலசம் ஆடி அருள ஒருசங்கிரமத்துக்கு நெல்லு பதினைங்கலமாக நாலுசங்கிரமத்துக்கு நெல்லு அறுபதின்கலத்துக்குப் பங்கு ஒன்றும் திங்கள சங்கிரமம எட்டுக்கு ஸங்கிரம மொன்றினுக்கு நெல்லு முக்கலமாக ஸங்கிரம மெட்டினுக்கு நெல்லு இருபத்துநாற்கலமும் கார்த்திகைவிளக்கீட்டு நெல்லு பதினைங்கலனே இருதூணிப்பதக்கறுநாழியுரியும் இவைச்சோடும் ஏற்றம் அருளிச்செய்த நெல்லு குறுணி ஒருநாழியும் ஆக நெல்லு பதினறுகலத்துக்கும் புதியிது அமுதசெய்தருள நெல்லு அறுபதின்கலத்துக்குப் பங்கொன்றும் உடையார் திங்கள் சதயவிழாப் பன்னிரண்டினுக்கு நெல்லு நூற்றிருபதின்கலத்துக்குப் பங்கிரண்டும் ஆக பங்கு ஒன்பது உள்பட பங்கு தொண்ணூற்று ஏழேமுக்காலினால் ஸ்ரீகுஞ்சரமல்லவாய்க்காலுக்கு வடக்கு இட்டநிலம் ஐம்பத்தெட்டரையே மூன்றுமாவும் தேவற்கு பரிசட்டத்துக்கு ஆண்டுவரை காசுபத்தும் அடைக்காயமுதுக்கு நிசதம் வெறுங்காய் அம்பதும் வெற்றிலைபற்று இரண்டரையும் ஆக ஆண்டுவரை வெறுங்காய் பதினெண்ணாயிரமும் வெற்றிலைபற்று தொள்ளாயிரத்துக்கும் ஆக காசு மூன்று திரிமெய்ப்பூச்சுக்கும் சீதாரிக்கும் ஆக நிசதம் சந்தனம் முப்பலமாக ஆண்டுவரை சந்தனம் ஆயிரத்து எண்பதின் பலத்துக்கு காசு ஒன்றுக்கு சந்தனம் அறுபதின் பலமாக காசு பதினெட்டும் சித்திரைபெருந்திருவிழாவுக்குக் காசு முப்பத்திரண்டும் ஆக காசு அறுபத்துமூன்றினால் காசு ஒன்றுக்கு நெல்லு எண்கலமாக நெல்லு ஐஞ்ஞூற்று நாற்கலத்துக்கு இவ்வடகரையில் இட்டபங்குகளால் வந்த நிலத்தில் நின்ற காற்பங்கால் வந்த நிலம் மூன்றுமாவும் ஸ்ரீகுஞ்சரமல்லவாய்க்காலுக்கு தென்கரை புன்செய்யும் ஓடையும் மேடும் படுகையும் விளைநிலமும் ஆகக்கிடந்த பதின்மூன்றேமுக்காலே இரண்டுமா அரைக்காணிக் கீழ் எழுமா அரை முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமாவும் ஆக நிலம் பதினாலே அரைக்காணிக்கீழ் எழுமாவரை முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமாவும் ஆகக் கலவாய்த்தலை நிலம் எழுபத்திரண்டரையே மூன்றுமாவரைக்காணிக்கீழ் எழுமாவரையே முந்திரிகைக்கீழரையே இரண்டுமாவும் இந்நாட்டு இக்கூற்றத்துத் தேவதானம் இளநிலம் இருபத்தாறரையே இரண்டுமாவின் கீழ்மூன்றுமாவின் கீழ் அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்மாவில் உடையார்க்கு திருவமிர்தரிசி போது குறுணியாக நாலுபோதைக்கு அரிசி தூணியும ஒலோகவிடங்க தேவர்க்கு திருவமிர்தரிசி போது நானாழியாக மூன்றுபோதைக்கு அரிசி குறுணி நானாழியும் கெணபதியார்கருத் திருவமிர்தரிசி போதிருநாழியாக மூன்றுபோதைக்கு அரிசி அறுநாழியும் இவர்க்கேய் அப்பவமிர்துக்கு அரிசி நாழியும் ஆக ஒருநாளைக்கு அரிசி தூணிப்பதக்கு முந்நாழிக்கு ஐஞ்சிரண்டுவண்ணத்தால் வந்தநெல்லு கலனேமுக்குறுணி எழுநாழியுரியும் பருப்பமிர்து போதுரியாக நாலுபோதைக்குமாகப்

பருப்பமிர்து இருநாழிக்கு நெல்லறுநாழியும் கறியமிர்துக்கு போது நெல் இருதூணியாக நாலுபோதைக்கு நெல்லு குறுணியும் மிளகு ஆழாக்கே இருசெவிடரைக்கும நெல் லறுநாழியும போனகத்துக்கும பொரிக்கறிய மிர்துக்கும் நிசதம் நெய் நாழிககு நெல்லுத் தூணியும் தயிரமிர்து நிசதம் நானாழிக்கு நெல குறுணிநானாழியும் சர்ககரையமிர்து உடையார்க்கு நிசதம் முப்பலமும் கணபதியார்க்கு அபபஅமிர்துககுச் சர்ககரை ஒரு பலவரையும் ஆகச் சர்க்கரை நாற்பலவரைக்கு நெலலு நானாழிஉரியும் வாழைபபழம் நிசதம் எட்டினுககு நெல்லு நானாழியும் மஞ்சள்காப்பு நிசதம அரைப்பலத்துக்கு நெல்லு நாழியுமாக ஒருநாளைக்கு நெல்லு ஒருகலனே குறுணி ஒருநாழியாக ஆண்டுவரை நெல்லு எழுநூற்றைம் பத்து முக்கலனே இருதூணி குறுணிக்கு வேலி நூற்றுக்கல வரிசைக் கீழ் நிலம் எழரையே முக்காணி திருநொந்தாவிளக்கு இருபதினுக்கு எண்ணை அஞ்ஞாழியும ஸந்திவிளக்கு நாற்பதினுககு போது நாழியாக மூனறு போதைக்கு முந்நாழியும் ஸ்ரீபலிஓலக்கத்துக்கு எண்ணை நானாழியும் ஆக எண்ணை குறுணிநானாழியால் நாழி எண்ணைக்கு நெல்லு தூணியாக நெல்லு நாற்கலததினால் ஆண்டுவரை நெல்லு ஆயிரத்து நானூற்று நாற்பதின்கலத்துக்கு வேலி நூற்றுக்கலம்மாக வந்த நிலம் பதினாலே எட்டுமாவும் திருப்பள்ளித்தாமம பறித்து தொடுப்பார் மூவர்க்கு நிசதம் நெல்லுக் குறுணி நானாழியும் திருமெழுக்கிடுவார் நால்வர்கது நிசதம் நெல குறுணி நானாழியும் நாயகஞ்செய்வானுக்கு நிசதம நெல்லுப் பதக்கும் விறகிடுவானுக்கு நிசதம் நெலலுப் பதக்கும் திருமெய்காபபார்கள் இருவாக்கு நிசதம நெல்லுப் பதக்கும் கவரிப் பிணைகள் பதினறுவர்க்கு போரல் நிசதம் நெல்லு முந்நாழியாக தூணிப்பதக்கும நிலவண்ணமிட உம்மாரப்பிண்டிக்கு நிசதம் நெல்லு நாழியும் நிலவண்ணமிடுவாருக்கு நிசதம் நெல்லு முந்நாழியும் ஆக நெல்லுககலனே முக்குறுணி நானாழியினால் ஆண்டுவரை நெல்லு நானூற்று அறுபத்தைஙகலத்துக்கு வேலி நூற்றுக்கல வரிசையால் இட்டநிலம் நாலரையே மூன்றுமா ஆக பலநிவந்தத்தாலும் இளநிலத்தில் இட்டநெல்லு இரண்டாயிரத்து அறுநூற்றைம்பத்து எண்கலனே இரு தூணிக்குறுணிக்கு இட்டநிலம் இருபத்து ஆறரையே ஒருமா முக்காணி. சித்திரைப் பெருந்திருவிழாவில் கணபதியார் திருவிழா வெழுந்தருளி அவல் முத்தூணிப்பதக்குக்கு நெல்லு கலனே முக்குறுணி நானாழிக்கு அருளிச்செய்ப இட்டநிலம் காணிக்கீழ் மூன்றுமாவின் கீழ் அரைக்காணி முந்திரிகைக்கீழ்நான்மா. ஆக நெல்லு இரண்டா யிரத்து அறுநூற்று அறுபதின்கலனே நானாழிக்கு இளநிலம் இருபத் தாறரையே இரண்டுமாவின் கீழ்மு...வின்கீழ் அரைக்காணி முந்திரிகைக் கீழ் நாமாவும் நிலமும் நெல்லும் நேர் இது பன்மாஹேஸ்பர ரக்ஷை.

பண்டிதர் L. உலகநாதபிள்ளை,

கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை.

ஸ்ரீ:

நாலாயிரப்பிரபந்தச்

# சாற்றுப்பாக்களின் ஆராய்ச்சி.

சென்ற வைகாசிமாதச் செந்தமிழ்ப்பகுதியில், நாலாயிரப்பிரபந்தங்களின் **சாற்றுப்பாக்கள்** என்ற தலைக்குறிப்பிட்ட ஒரு கட்டுரை, **ஸ்ரீமாந். கிடாம்பி அனந்தன்** என்பவரால் எழுதப்பட்டு வெளிவந்தது. அதிற் பல ஆக்ஷேபங்கள் தோன்றுகின்றமையான் அவற்றுள், சில வற்றைத் தொகுத்தெழுதலானேன்.

க. திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவாய்மொழியின் சாற்றுப் பாக்கள் ஆழ்வார்கூற்றென ஒருதலையாகக் கூறினாரில்லையாயினும், அவர் வியாக்யானத்தைப்பாராய்வுழி அப்பாக்கள் ஆழ்வார்கூற்றென்றெனப் புலனு மெனவுரைத்தனர். இது பொருந்தாதென்பது பின்வருவனவற்றால் விளங்கும்.

'நாயகன் முழுவேழுலகுக்குமாதன்' என்றபாட்டிற்குத் திருக் குருகைப்பிரான்பிள்ளான் 'நாயகனை' 'கீழிரண்டுதிருவாய்மொழியாலும் சொன்னவர்த்தத்தை நிகமிக்கிறது' என்று இதற் கவதாரிகை கூறினர். கீழ்த்திருவாய்மொழியின் சாற்றுப்பாட்டெல்லாத்தும் பலத்தை முக்கிய மாகவுரைத்துப்போந்தனபோலன்றி இத்திருவாய்மொழி கீழுரைத்தன வற்றைத் தொகுத்துக்கூறுதலே முக்கியப்பொருளாமெனபார் கீழிரண்டு திருவாய்மொழியாலும்சொன்னவர்த்தத்தை நிகமிக்கிறதென்கிறார்.

நிகமப்பாட்டு நூலாசிரியர்கூற்றெனக் கொள்ளல்வேண்டுமேயன்றிப் பிறர்கூற்றெனப்படாவாம். என்னை? முன் விரிவாய்க்கூறியவற்றைப் பயிறலுறுவோர் மனத்திற் றெள்ளிதிற் புலனுமாறு பின்னருஞ் சுருக் கிக்கூறி விஷயத்தோடு பொருத்தமுறவைத்தலான. 10-ம் பத்து 11-ம் பாசுர வியாக்கியானத்தில 'எனக்கெளியனுய்' என ஆழ்வாருடைய உக் தியே அநுகரிக்கப்பட்டது.

இதனுல் திருக்குருகைப்பிரான்பிள்ளான், சாற்றுப்பாக்களை ஆழ் வார்கூற்றெனக் கொண்டனரென அறியலாம். யாண்டும் பிறர்கூற்றென

ஆராய்தற்கு ஆதரவுகூறினரில்லை. இச் சாற்றுப்பாட்டுந் தற்புகழ்ச்சி மலிந்துகிடக்கின்றமையாற் பிறர்கூற்றாகாதோவெனின் ? ஆகாது; என்னை ?

"மண்மிசைப்பெரும்பாரநீங்கவோர்பாரதமாபெரும்போர்
பண்ணிமாயங்கள்செய்துசேனையைப்பாழ்படநூறிட்டுபோய்
விண்மிசைத்தனதாமமேபுகமேவியசோதிதன்றாள்
நண்ணிநான்வணங்கப்பெற்றேனெனக்கார்பிறர்நாயகரே."

என்னும் இப்பாட்டிலும் தற்புகழ்ச்சி மலிவுற்றிருக்கின்றமையான் இதையும் பிறர் கூற்றெனக் கழிக்கவேண்டுமாகையால் என்க.

உ. சில பிரபந்தங்கள் சாற்றுப்பாக்களைப்பெற்றும் பெறாதுமிருக்கின்றன என்றார்.

பிரபந்தங்கடோறும் சாற்றுப்பாக்களிருத்தல்வேண்டுமென்பதும், இல்லாதிருக்கலாகாதென்பதும் யாப்புறவின்றாம். அதனாற் சில பிரபந்தங்கள் சாற்றுப்பாக்களைக்கொண்டும் கொள்ளாதும் வந்தன. சில பிரபந்தங்கள் சாற்றுப்பாக்களைக் கொள்ளாதிருக்கின்றகாரணத்தாற் சாற்றுப்பாக்களை ஏற்ற பிரபந்தங்களிலுள்ள அப்பாட்டுக்களைப் பிறர்கூற்றெனவலியுறுத்தற் கியலாதெனவறிக.

ந. பெரியதிருமொழி 18-வது பதிகத்தில், 'தென்னன் தொண்டையர்கோன்வணங்கும் வயிரமேகன்' என்ற இறுதிப்பாட்டில் வயிரமேகனது சிறப்புக்கூறுகின்றமையான் அவ்வயிரமேகன் காலத்துக்குப் பிற்பட்டவர் திருமங்கைமன்னனெனக் காலவாராய்ச்சி செய்வார்கூற்றைக் கடிவதற்குச் சாற்றுப்பாட்டுப் பிறர்கூற்றெனக் கூறினர்.

ஒரு குலத்தில் உரைசான்ற ஒரு பெரியோன்றோன்றின் அவனது பெயர் அக்குலத்தில் பின்னுள்ளோர்கட்கும் இட்டு வழங்கிவருவதோர் அடிப்பட்ட வழக்குண்டு. அவ்வழக்குப்பற்றி வயிரமேகனது வழியிற் றோன்றிய ஒருவனுக்கு வயிரமேகனெனப் பெயர்வந்திருக்கலாம். ஆதலால் அப்பெயரைக் கொண்டு காலநிர்ணயம் பண்ணலாகாதென்பது சிறந்த ஆராய்ச்சியாளர் துணிபாயிருக்கிறது. அதனால் இவர்

கூற்றுப் பயனில்கூற்றென்றறியலாம். வயிரமேகனுக்குப் பிற்பட்டவர் ஆழ்வார் என்பவர்கூற்று உண்மையாய்விடுமாயின், அவ் வுண்மையைக் கடியக்கருதிச் சாற்றுப்பாக்கள் ஆழ்வார்கள்பாடியவை என்னும் ஒருண்மையை இல்லையென்பதனுற்போந்தபயனென்னவோவென மறுக்க.

௬. சடகோபர், மதுரகவியார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கைமன்னன் இவர்களருளிய பிரபந்தச்சாற்றுப்பாக்களில் இவர்தம் தற்புகழ்ச்சியும் பிருதுகளும் காணப்படுகின்றன. மற்றப்பாக்களில் ஆழ்வார்தம் எளிவரவு காணப்படுகிறது. இவ்விரண்டையும் ஒப்பநோக்குமிடத்துச் சாற்றுப்பாக்கள் பிறர்கூற்றெனத் தெற்றென அறியலாமெனக்கூறினர்.

ஆழ்வார்கள் தம்மைக்குறித்துப்பேசுமுகத்தால், தம்மை இழித்துக்கூறியும், தாம்பெற்ற பேறுபற்றிக்கூறுமுகத்தானும், அறிவிலிகளாகிய சம்சாரிகளைக்குறித்து உபதேசிக்கும் முகத்தானும் தம்மைப்புகழ்ந்துரைத்தும் ஆப்தவசனமென யாவரும எடுத்தாள்வதற்குத் தம்மைப் படர்க்கையாக்கித் தம்பெருமைகளையும் தம் பிருதுகளையும் தாமே எடுத்துரைத்தும் செல்வர். இங்ஙனஞ் சொல்வது இவர்களுக்குமாத்திர முரியதொன்றன்று. ஏனையகவிகட்கு முண்டெனக் கொள்க. ஏனையகவிகளும் தம்மைப் படர்க்கையாக்கிப் புனைந்துரைத்தமை பின்வரும் உதாரணங்களால் அறிக.

ஸ்ரீராமாயணத்தில் 'வாலீகிமஹாவா நுஷி:' என்று வால்மீகி மஹருஷியும்,

பழமொழியில்,

"பிண்டியினீழற்பெருமானடிவணங்கிப்
பண்டைப்பழமொழிநானூறுங்—கொண்டினிதா
முன்றுறைமன்னவனுன்கடியுஞ்செய்தமைத்த
இன்றுறைவெண்பாவிவை."

என முன்றுறையரையனரும்,

திரிகடுகத்தில்,

"உலகிற்கடுகேமுடலிஞேய்மாற்று
மலகிலகநோயகற்று—நிலைகொள்

திரிகடுகமென்னுந்திகழ்தமிழ்ச்சங்கம்
மருவுநல்லாதன்மருந்து."

என்று நல்லாதனரும்,

சிறுபஞ்சமூலத்தில்,

"மல்லிவர்தோண்மாராயன்மாணுக்கன்மாநிலத்துப்
பல்லவர்நோய்நீக்கும்பாங்கினாற்—கல்லா
மறுபஞ்சந்தீர்மழைக்கைமாக்காரியாசான்
சிறுபஞ்சமூலஞ்செய்தான்".

என்று காரியாசானும்,

தேவாரத்தில்,

"நித்திலன்மிழலையைநிகரிலிபுகலியுள்
வித்தகமறைமலிதமிழ்விரகனமொழி
பத்தியில்வருவனபத்திவைபயில்வொடு
கற்றுவலவருலகினிலடியவரே."

என்று சம்பந்தரும் ஆகிய இவர்கள் தம்மைப் படர்க்கையாக்கித் தம்புகழைச் சிறப்பித்துரைத்தமை காண்க. இவற்றைப் பிரயோகவிவேக நூலாசிரியர், "சம்பந்தர் சடகோபர் முதலாயினரும், திவாகரரும் பதினெண்கீழ்க்கணக்குச்செய்தாரும் முன்னாக பின்னாக பதிகம் கூறுவதுங் காண்க" எனக் கூறியவாற்றானு முணரலாம்.

"மன்னுடைமன்றத்தோலைத்தூக்கினும்
தன்னுடையாற்றலுணராரிடையினும்
மன்னிய அவைமிடைவெல்லுறுபொழுதினும்
தன்னைமறுதலைபழித்தகாலையும்
தன்னைப்புகழ்தலுந்தகும்புலவோர்க்கே."

என்று இன்னின்ன இடங்களில் தற்புகழ்ச்சி கூடுமெனவும்,

கவயஸ்த்ரயோ நாமாத்மஸ்லாகயா ப்ராப்நுவந்தி யஸ்:।
உதாத்த உத்தத: ப்ரௌடோ விநீதஸ் து ந லப்யதே॥

உதாத்தர், உத்ததர், பிரௌடர், விநீதர் என்ற நால்வகைப்புலவருள் விநீத கவியல்லாத மற்றை மூன்றுகவிகள், தம்மைத் தாமே புனைந்துரைக்கும் பான்மையினரெனவும் ஆன்றோரானை தந்தனவும் இதனை வலியுறுத்தும்,

அன்றியும், பிரபந்தங்களின் இடையேயும் தற்புகழ்ச்சிப்பாடல்கள் உள்ளன. அவை,

## திருவாய்மொழி.

"நின்றுநின் றுபலநாளுய்க்குமிவ்வுட லீங்கிப்போய்ச்
சென்றுசென்ருகிலுங்கண்டுசென்மங்கழிப்பானெண்ணி
யொன்றியொன்றியுலகம்படைத்தான் கவியாயினேற்கு
என்றுமென் றுமினிமற்ருெருவர்கவியேற்குமே." (29-10.)

"கரியமேனிமிசைவெளியநீறுசிறிதேயிடும்
பெரியகோலத்தடங்கண்ணன்விண்ணோர்பெருமான் றன்னை
யுரியசொல்லாலிசைமாலைகளேத்தியுள்ளப்பெற்றேற்கு
அரியதுண்டோவெனக்கின் றுதொட்டுமினியென்றுமே." (35-6.)

" நமக்கும்பூவின்மிசைநங்கைக்குமின் பனேஞாலத்தார்
தமக்கும்வானத்தவர்க்கும்பெருமானைத்தண்டாமரை
சுமக்கும்பாதப்பெருமானைச்சொன்மாலைகள்சொல்லுமா
றமைக்கவல்லேற்கினியாவர்நிகரகல்வானத்தே" (35—8.)

" கண்டுகொண்டேன் கண்ணிணையாரக்களித்துப்
பண்டைவினையாயினபற்ரோடறுத்துத்
தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள்சொன்னேன்
அண்டத்தமரர்பெருமானடியேனே" (84—9.)

## பெரியதிருவந்தாதி.

" என்னில்மிகுபுகழார்யாவரேபின்னையும்மற்
றென்னில்மிகுபுகழேன்யானல்லால்—என்ன
கருஞ்சோதிக்கண்ணன்கடல்புரையுஞ்சீலப்
பெருஞ்சோதிக்கென்னெஞ்சாட்பெற்று" (4.)

## பெரியாழ்வார்திருமொழி.

" எம்மனுவென்குலதெய்வமேயென்னுடைநாயகனே
நின்னுளேனுய்ப்பெற்றநன்மையிவ்வுலகினிலார்பெறுவார்" (45-3.)

## திருமாலை.

" காவலிற்புலனைவைத்துக்கலிதன்னைக்கடக்கப்பாய்ந்து
நாவலிட்டுழிதருகின்றேம்நமன்தமர்தலைகள்மீதே" (1)

## பெரியதிருமொழி.

“ இற்பிறப்பறியீரிவரவரென்னீரின்னதோர்தன்மையென்றுணரீர்
கற்பகம்புலவர்களைகணென்றுலகிற்கண்டவாதொண்டரைப்பாடுஞ்
சொற்பொருளாளீர்சொல்லுகேன்வம்மின் ” (1—7.)

என்பனவும் இவைபோன்றனவாகியபாடல்கள் இன்னும் பலவும் இருக்கின்றன. இவைகளிலெல்லாம் தற்புகழ்ச்சிதோன்றுதலாற் பிறர் கூற்றெனச் சொல்லுமாறு யாங்ஙனம்?

ரு. ‘அல்வழக்கொன்றுமில்லாவணிகோட்டியர்கோன் அபிமானதுங்கன்—செல்வனைப்போலத்திருமாலேநானுமுனக்குப்பழவடியேன்’ என்ற திருப்பல்லாண்டின் பதினோராம்பாட்டைமட்டும் ஆழ்வார்கூற்றென ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இப்பாட்டில் இரண்டு பழ அடிமைகள் புலப்படுகின்றன. அவற்றுள் ஒரு பழஅடிமை உவமை. மற்றொரு பழஅடிமை பொருள். பழமை தொன்மை என்பன ஒருபொருட்கிளவி. இங்கு உவமையாய் நின்ற பழஅடிமையையுடைய செல்வநம்பிக்கும், பொருளாய்நின்ற பழஅடிமையையுடைய பெரியாழ்வார்க்கும் காலம் சமமே. உவமை பொருளைக்காட்டிலும் நூறுமடங்கு அதிகமாயிருத்தல்வேண்டுமென்பது அணியிலக்கணநூலார் துணிபு. அத்துணிபுபற்றி இங்குவந்த பழஅடிமைகளை ஊகிப்போமாகில், செல்வநம்பியின் பழஅடிமை மிகப்பழமையென்றும், ஆழ்வாரின் பழஅடிமை அத்துணையன்றென்றும் பொருள்கொள்ளவேண்டும். இவர்கூறிய தொன்மையின்பொருளை உட்கொண்டு இங்குவந்துள்ள பழஅடிமைகட்குப் பொருளாராயின், ஸமகாலத்தவராகிய செல்வநம்பியை மிகப் பழஅடிமையுடையவரென்பதும், புது அடியவராகிய தம்மைப் பழஅடியேனென்பதும் அவர்க்குப்பொருந்துமாறெங்ஙனம்? இந்தப் பழமை என்பது அடியேன் என்பதனை விசேடியாமல் அநாதிசித்தமாயுள்ள அடிமையையே விசேடித்ததென அறியத்தக்கது. இப்பழமைகளை விவாதிக்காமல் அங்கிகரித்துக்கொண்டு பின்வரும் ‘தொல்சீர்’ முதலியவற்றைமட்டும் அநுபபன்னமெனச்சொல்வது நியாயவிரோதமாகும்.

௬. பெரியாழ்வார்திருமொழியிற் சிலபதிகச்சாற்றுப்பாக்கள் இனைத்தெனத் தொகை குறிக்கப்பெற்றும், பெறாதும், சிலபதிகங்களிற் பயன்கூறியசாற்றுப்பாக்களையும் பதிகக்கணக்குடனெண்ணி இத்துணை யெனத் தொகை குறித்தும், சிலபதிகங்களில் அங்ஙனமில்லாமலும் பல் வேறுவகையாகக் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படுதலானே பிறர்கூற்றெனத்தெற்றெனவறியலாம் எனக் கூறினர்.

பயன்கூறிய சாற்றுப்பாக்களைப் பதிகத்துடன் கணக்கிட்டும் இடாதும் வருவதோர் வழக்குண்டு. அவ்வழக்கைப்பற்றியெழுந்தது இப்பெரியாழ்வார்திருமொழியென அறிக. இவ்வாறன்றிச் சாற்றுப் பாக்களைப் பிறர் கூற்றெனக் கொள்ளின், பத்தெனத் தொகைகுறிக்கப் பட்டபதிகங்களில் ஒன்பது ஒன்பதுபாடல்களே ஆழ்வார் கூற்றெனக் கொள்ளவேண்டும். கொள்ளிற் பதிகமாமா றெங்ஙனம்? அதுநிற்க, பயன் கூறியசாற்றுப்பாக்கள் இவ்வொன்பதுமெனத் தொகை குறித்திருக்க வேண்டும். அவ்வாறு ஓரிடத்தும் குறிக்காததனாலும் பிறர்கூற்றன் றென அறியலாம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சுந்தரமூர்த்திநாயனாருரைத்த தேவாரப்பதிகங்கள் மேற்கூறியாங்குச் சாற்றுப்பாக்களைவிடுத் தினைத் தெனத் தொகைபெற்றும் பெறாதும் சாற்றுப்பாக்களைச்சேர்த் தினைத் தெனத் தொகைபெற்றும் பெறாதும் ஒன்றுதலையிட்டபத்துப்பாக்களை யும், இரண்டு தலையிட்டபத்துப்பாக்களையும் ஏற்றிருக்கின்றன.

ஆதலால், இங்ஙனம் வருவதோர்பெற்றியுண்டென அடிப்பட்ட சானறோர்பால் முறைப்படக்கேட்டுணர்ந்தோர் யாவருமறிவர்.

௭. "செம்மையுடையதிருவரங்கர்தாம்பணித்த
மெய்ம்மைப்பெருவார்த்தைவிட்டுசித்தர்கேட்டிருப்பர்
தம்மையுகப்பாரைத்தாமுகப்பரென்னுஞ்சொல்
தம்மிடையேபொய்யானாற்சாதிப்பாராரினியே.

என்றபாட்டுப் பொருத்தமுடையதன்றென்கின்றார்.

இப்பாட்டுக்கு இவருரைத்தது பொருளன்று. இது தனியே விரி வுரையெழுதிப் பயிறற்பாலதொன்றும். அத்துணைப் பெருஞ்சிறப்புவாய்ந் தது. அஃ தீண்டுரைக்கத்தக்கதுமன்று. ஆதலால் வியாக்யானம் வல் லுநர்பால் நன்குகேட்டுத் தெளியத்தக்கது.

அ. திருவிருத்தத் தீற்றுப்பாசுரத்தைத் திருவாசிரியம் பெரியதிருவந்தாதிகளின் கடைப்பாக்களுடன் சேர்த்துப்பார்க்குமிடத்து அப்பாட்டு நூதனப்பாட்டு என எளிதின் வெளியாகும் என்றார்.

இதற்குக் காரணங் காட்டாமையால் ஆராயத்தக்கதன்று; ஆயினும் ஒருவாறாராய்வோம்.

திருவிருத்தம் அந்தாதித்தொடரான் நூறு கட்டளைக்கலித்துறைகளடங்கிய அகப்புறமென்னும் பொருடழுவப்பெற்ற ஒருபிரபந்தமென யாவருமறிவர். அந்தாதிப்பிரபந்தத்திற்கு இறுதிப்பாட்டின் இறுதி முதற்பாட்டின் முதலோடு மண்டலித்து வரவேண்டுமென்பதோர் யாப்புறவுண்டு. அவ் யாப்புறவு, முதற்றிருவந்தாதியில், "மாயவனையேமனத்துவை" என்ற இறுதிப்பாட்டில் வை என்னும் இறுதிச்சீர், "வையந்தகழியா" என்ற முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும், இரண்டாந்திருவந்தாதியில் "அளவனாலை யானுடையவன்பு" என்ற இறுதிப்பாட்டின 'அன்பு' என்ற இறுதிச்சீர, 'அன்பேதகழியா' என்ற முதற்பாட்டின் முதற்சீருடன் மண்டலித்தும், மூன்றாந்திருவந்தாதியில், "தேனமரும்பூவேற்றிரு" என்னும் இறுதிப்பாட்டின் 'திரு' வென்னும் இறுதிச்சீர், 'திருக்கண்டேன்' என்னும் முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும், நான்முகன் திருவந்தாதியில், நாரணன்சீ நன்கறிந்தேன்நான் என்ற இறுதிப்பாட்டின் 'நான்' என்னும் இறுதிச்சீர், "நான்முகனைநாராயணன்படைத்தான்" என்ற முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும், பெரியதிருவந்தாதியில், "மொய்கழலேயேத்தமுயல்" என்ற இறுதிப்பாட்டின் 'முயல்' என்ற இறுதிச்சீர், "முயற்றிசுமந்தெழுந்து" என்னும் முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும், திருவாய்மொழியில் "அவாவிலந்தாதியிப்பத்தறிந்தார்பிறந்தாருயர்ந்தே" என்னும் இறுதிப்பாட்டின் 'உயர்ந்தே' என்னும் இறுதிச்சீரின் முதலசை, "உயர்வறவுயர்நலம்" என்ற முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும் வந்தமை காண்க. அங்ஙனமே இத் திருவிருத்தத்திலும், "பொல்லாவருவினைமாயவன்சேற்றள்ளற்பொய்ந்நிலத்தே" என்ற இறுதிப்பாட்டின் இறுதிச்சீராகிய மூவசைச்சீரின்முதலசை, "பொய்ந்நின்றஞானமும்" என்ற முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்துவந்தமையால் ஆழ்வார்கூற்றென்றறியலாம். இவ் விறுதிப்பாட்

டையும் பிறர்கூற்றென எடுத்துக்களையில் அந்தாதியாமாறெங்ஙனம்? "சொல்லார்தொடையலிந்நூறும்வல்லாரழுந்தார்பிறப்பில்" என்ற அடியிலுள்ள பொருணயத்தைக் கருதியன்றே,

"கருவிருத்தக்குழிநீத்தபின்காமக்கடுங்குழிவீழ்ந்
தொருவிருத்தம்புக்குழலுறுவீருயிரின்பொருளுக்
கொருவிருத்தம்புகுதாமற்குருகையர்கோனுரைத்த
திருவிருத்தத்தோரடிகற்றிரீர்திருநாட்டகத்தே".

என்று கிடாம்பியாச்சான் தனியனருளிச்செய்தது. ஆதலால் இச்செய்யுள், சொற்சுவையானும் பொருட்சுவையானும் இலக்கணவமைதியானும் திருவாசிரியம் பெரியதிருவந்தாதி என்ற பிரபந்தச்செய்யுள்களிற் றாழ்வுற்றதன்று.

௯. ஆழ்வார் அருளிய துவாதசநாமப்பதிகத்தில் ஒவ்வொரு பாசுரமும் ஒருநாமத்துடன் றொடங்கி அடுத்தநாமத்துடன் முடிவதுபோல், பதின்மூன்றுவது பாசுரத்திற்கு அச்சிறப்பொன்றுமில்லையெனக் குறைகூறினர்.

திரயோதசநாமப்பதிகமெனப் பெயர்பெறினன்றே அச்சிறப்பெய்தி நிற்கும். இது துவாதசநாமப்பதிகமாதலான் அச்சிறப்பெய்துதற்கோர் விதியின்றென விடுக்க. அன்றியும், இங்கு அச்சாற்றுப் புறவுரையாயிற்றெனினுமாம்.

௧0. திருவாய்மொழியின்செய்யுட்டொகை ஆயிரமென யாவருமறிவர் என்றும், அவை ஓரந்தாதிபாகாதென்றும், சாற்றுப்பாக்களைச் சேர்த்தெண்ணின் 1102 பாடல்கள் இருக்கின்றமையான் ஆயிரமென்று கூறியதற்கு முரண்படுகிறதென்றும், அதனாற் சாற்றுப்பாக்களைப் பிறர்கூற்றாக வைத்தெண்ணவேண்டுமென்றும், விடுத்தெண்ணினும் பதிகங்கள் இனிதுமுடிகின்றனவென்றும், வேண்டியாங்கெல்லாம் உரைத்துப் போந்தார்.

ஆயிரமென்ற பேரெண்ணால் வழங்கப்படுமெண்ணில் நூற்றுக்கணக்கானதொகை கூடினும் குறையினும், நூறென வழங்கப்படுமெண்ணில், பத்து முதலிய தொகைகள் சில மிகினும் குறையினும், பத்தெனவழங்

கட்டளையெண்ணில் ஒன்றிரண்டு ஏற்றிழிவெய்தினும் கூறப்பட்டபேரெண்ணால் வழங்கப்பட்டுவருவது உலகப்பிரசித்தம். பயன்கூறியபாடல்களை விஷயங்கூறியபாடல்களோடு சேர்த்தெண்ணப்படாததோர்மரபுண்மையான் அம்மரபுபற்றியும், பதிகங்கடோறும் பாட்டினெண்ணிக்கை பத்துப்பத்தெனச் சுட்டிப்போந்தார். அதனான் ஆயிரமென்ற பிரஸித்திக்குக் குறையின்றெனக்கொள்க. பயன்கூறியபாடல்களையுஞ் சேர்த்தெண்ணும் பகுதியைச்சேர்ந்தது பெரியதிருமொழி எனவும், இவ்விருவகையினையும் ஒருசேரக்கொண்டது பெரியாழ்வார்திருமொழி எனவும், வேறுபாடறிக. இவ்வாறே தேவாரத்திருமுறைகளிலுங் காணலாம். திருப்பல்லாண்டு, கண்ணிநுண்சிறுத்தாம்பு என்ற இவ்விருநூல்களில் ஒவ்வொருசெய்யுளைப் பிறர்கூற்றாகக்கழித்து எஞ்சியபாடல்களைப் பதிகமாகவும் பெரியதிருமொழியின் சாற்றுப்பாக்களைப் பிறர்கூற்றாகக்கழித்து ஒன்பதொன்பது பாடல்களைப் பதிகமாகவும்கொண்ட இவர் திருவாய்மொழியிற் பதினொருபாடல்களைப் பதிகமாகக்கொள்ளாததற்கு நியாயமில்லை. நூற்றெட்டுச்செய்யுளுள்ள இராமாநுஜர் விஷயமான அந்தாதப் பிரபந்தத்தை இராமாநுஜநூற்றந்தாதியென வழங்குவதுபோல 1102 பாடலுள்ள திருவாய்மொழியைப் பேரெண்ணால் ஆயிரம்பாட்டென வழங்கின் ஒரு குறையின்றுமெனப் பொருள்கொள்ளினும் பொருந்தும். ஆயிரம்பாட்டுச்சேர்ந்து அந்தாதியன்று; நூறுபதிகமெனின் ஒவ்வொரு பதிகமும் ஒவ்வொரு அந்தாதியாகக் கொள்ளவேண்டும். அங்ஙனம் கொள்ளின், சாற்றுப்பாட்டில் அந்தாதிப் பிரபந்தங்களான்முடிந்த என்றிருக்கவேண்டும். அவ்வாறன்றி "அவாவிலந்தாதிகளாலிவையாயிரமுமுடிந்த அவாவிலந்தாதி" என்றிருத்தலான ஆயிரம் பாசுரங்களும் ஒரு அந்தாதியேயெனக் கொள்ளற்பாற்று.

"எண்ணிற்சோர்விலந்தாதியாயிரம்" (26—11)
"பண்ணியதமிழ்மாலையாயிரம்" (17—11)
"நிரைக்கொளந்தாதியாயிரம்" (43—11)
"நிறங்கிளர்ந்தவந்தாதியாயிரம்" (44—11)
"ஆகநூற்றவந்தாதியாயிரம்" (50—11)
"கேழிலந்தாதியோராயிரம்" (63—11)
"தீதிலந்தாதியோராயிரம்" (72—11)
"…ருடையந்தாதியோராயிரம்" (94—11)

என்ற இக்கூற்றுக்களும் மேற்கூறியாங்கு ஆயிரமுஞ்சேர்ந்தே அந்தாதியென்பதை வற்புறுத்தும்.

பதிகங்கடோறுமுள்ள சாற்றுப்பாக்களின்றிப் பதிக மினிது முடியவில்லை. இப்பதிகமனைத்தும் அந்தாதித்தொடர்களாம். அதனுன் மேற்கூறியாங்கு இறுதிப்பாட்டின் இறுதிச்சீர் முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலிக்கவேண்டுமன்றே. "பத்துடையடியவர்க்கெளியவன்" என்றதிருவாய்மொழியின், பத்தாவதுபாட்டின இறுதியடி "அயற்பிலனலற்றுவன்றழுவுவன்வணங்குவனமர்ந்தே" எனவும், "வளவேழுலகின்முதலாய" என்ற திருவாய்மொழியின் பத்தாவதுபாட்டின் இறுதியடி, "நேர்ந்தவுருவாயருவாகுமிவற்றினுயிராம்நெடுமாலே" எனவும், முடிவுபெற்றிருக்கின்றன. இவ்விறுதியடியின் சீராவது, அசையாவது, எழுத்தாவது, பொருளாவது முதற்பாட்டின் முற்சீரோடு மண்டலித்ததென வுரைப்பதற்கியலாதாம். இவைபோலவே பலபதிகங்களுமிருக்கின்றன. ஆதலாற் பதிகம் அந்தாதித்து இனிதுமுடியுமாறுயாண்டையதென விடுக்க.

௧௧. மதுரகவிகள் அருளிய கண்ணிநுண்சிறுத்தாம்பு என்ற பிரபந்தத்திற் காணப்படும் இறுதிப்பாட்டும் அவரருளியதல்லவென மறுக்கின்றார்.

ஆசார்யன்பக்கல் க்ருதஜ்ஞதை செய்யுங்கால் தன் றாழ்வுடைமையைப் புலப்படுத்தவேண்டியது கடமையாதலான் அம்முறைபற்றி மதுரகவிகள், "நம்பினேன்பிறர்நன்பொருடன்னையும்—நம்பினேன்மடவாரையுமுன்னெலாம்" எனவும், "நன்மையால்மிக்கநான்மறையாளர்கள்—புன்மையாகக்கருதுவர்" எனவும் தம தாழ்வுடைமையைத் தெரிவித்தும், தாம் பெற்றபேற்றின் மகிழ்வான், "அண்ணிக்குமமுதூறுமென்னுவுக்கே" எனவும், "நாவினுனவிற்றின்பமெய்தினேன்" எனவும், "எண்டிசையுமறியவியம்புகேன்" எனவும், "அடியேன்சதிர்த்தேனின்றே" எனவும் தம்மைப் புனைந்துரைத்துமுள்ளார். முன் தம்மை இழித்துக்கூறியதோடு இப்புனைந்துரை முரணுறுகிறதென எடுத்துக்கொளயினன்றே ஈற்றுப்பாட்டையும் அவர்கூற்றன்றென விடுக்கவேண்டும். அன்றியும், இப்பிரபந்தமும் அந்தாதித்தொடரான் அமைந்ததாதலான் இறுதிப்பாட்டைவிடுத்தெண்ணின் மண்டலிக்காமையின், இதுவும் அவர் கூற்

றெனக்கொள்க. அற்றேல், "மதுரகவிசொன்னசொல்-நம்புவார்பதிவை குந்தம்காண்மினே" என்ற ஈற்றடியின் காண்மின் என்னும் இறுதிச்சீர், "கண்ணிநுண்சிறுத்தாம்பினால்" என்ற முதற்பாட்டில் 'கண்ணிநுண்' என்ற முதற்சீரோடு மண்டலித்ததெனக் கூடுமோவெனிற் கூடுமென்க. என்னை? திரிந்ததின்திரிபு வேறன்று என்ற நியாயத்தாற் காண்மின் என்பதன் ஏகதேசமாகிய காண் என்பது கண்ணெனத்திரியுமாதலான். அது அக் காணெனபதின்வேறாகாத சப்தஸ்வரூபமாத்திரத்தால், கண்ணிநுண்சிறுத்தாம்பு என அந்தாதித்து முடிந்தது.

கஉ. திருப்பள்ளியெழுச்சி, திருமாலை என்ற இவ்விருநூல்களையும் இயற்றியவர் ஒரே தொண்டரடிப்பொடியாரல்லரெனறுர்.

திருப்பள்ளியெழுச்சியின் சாற்றுப்பாட்டில் "தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப்பொடி யென்னுமடியனை" என்ற அடியையும், திருமாலைச்சாற்றுப்பாட்டில், "துளவத்தொண்டாயதொல்சீர்த்தொண்டரடிப்பொடிசொல்" என்ற அடியையும் உற்றுநோககுமிடத்து இரண்டிடங்களிலும் துளவத் தொண்டையுடைய தொண்டரடிப்பொடி எனக் குறிககப்படுகின்ற ஒற்றுமையால் இவ்விருபிரபந்தஙகளையும் இயற்றியவர் ஒருவரேயாயிருத்தல் வேண்டுமெனபதுபோதரும். அனறெனின இவர்கூறியாங்குத் திருப்பள்ளியெழுச்சி இயற்றியவர் ஒரு தொண்டரடிப்பொடியாரென்றேனும், திருமாலையியற்றியவர் வேறொரு தொண்டரடிப்பொடியாரெனறேனும் கொள்ளவேண்டும். அன்றி, வேறுயாரேனுமாகுக. திருமாலையெனனும் நூலைச்செய்தவர் யாரேனும் ஓர் ஆழ்வாராயிருத்தல்வேண்டுமெனபது ஒருதலையாம். அஙஙனமாக, சாற்றுப்பாட்டாகிய,

"வளவெழுந்தவளமாடமதுரைமாநகரந்தன்னுள்
கவளமால்யானைகொன்றகண்ணனையரங்கமாலைத்
துளவத்தொண்டாயதொல்சீர்த்தொண்டரடிப்பொடிசொல்
இளையபுன்கவிதையேனுமெம்பிராற் கினியவாறே"

என்ற இப்பாட்டையும் ஆழ்வாருடையபாட்டென ஒப்புக்கொள்ளுதற்கு உரிமையுடையோராவர். இதுவும் பிறர்கூற்றெனின் ஆகாதென்க. பிறர் கூற்றாயின ஆழ்வாரின்கவியைப்புனைந்துரைத்திருத்தல்வேண்டும். ஈண்டு 'இளையபுனகவிதை' யெனத் தம் எளிவரவு தோனறச் சுட்டியதனுல் ஆழ்

வார்கூற்றென்பதற்கோர் ஐயமின்றாம். அங்ஙனமிருக்க, இவர் 'தொல் சீர்த்தொண்டரடிப்பொடி' என்ற சொற்றொடரோடு, 'இளையபுனகவிதை' என்ற சொற்றொடர் தாம் கொண்ட தொல்சீர்ப்பொருளோடு முரண்படு கின்றமையால் விடுத்தனர்போலும். இங்குவந்ததொல்சீர்க்குப் பொரு ளெதுவோ அதுவே அவர்காட்டிய தொல்சீர்க்கும் பொருளாமென அறிக. தொல்சீர்ப்பொருள் பின்வருவனவற்றால் விளங்கும்.

௧௫. "பாரணிந்ததொல்புகழான்விட்டுசித்தன்"
"பாரார்தொல்புகழான்புதுவைமன்னன்"
"பார்மலிதொல்புதுவைக்கோன்"
"வீரணிதொல்புகழ்விட்டுசித்தன்"
"குழற்கோதைமுன்கூறியபாடல்"
"வழுவாததொல்புகழ்வண்குருகூர்ச்சடகோபன்"
"வண்குருகூர்ச்சடகோபன்முந்தையாயிரம்"
"தொண்டாயதொல்சீர்வயன்மங்கையர்கோன்கலியன்"
"பாரணிந்ததொல்புகழான்கலியன்"
"நன்றாயதொல்சீர்வயன்மங்கையர்கோன்கலியன்"

என்பவை இவ்வாழ்வார்கட்குத் தொன்மைபிறந்தகாலத்தில் இச்சாற்றுப் பாக்கள் உண்டானதைக்காட்டும் எனக்கூறினர்.

'தொல்புகழான்விட்டுசித்தன்' என்பதில், 'தொல்புகழ்' என்பதற்கு அநாதியானவாழ்த்தென்பது பொருளாம். ஆசி, வணக்கம், புகழ், வாழ்த்து எனபன ஒருபொருட்கிளவி. கடவுள் அநாதியாகலான் அவன்வாழ்த்து அநாதியாயிற்று. புகழான்விட்டுசித்தன் என்பது அவ்வாழ்த்தை யுடைய விட்டுசித்தன் என்றவாறு. அஃதாவது அவ்வாழத்தைச் சொல்லுமவரென்றபடி. ஸநாதனதர்மத்தைக் கைக்கொண்டொழுகுமவர் களை ஸநாதனதர்மிகளென வழங்குவதோர் வழக்குண்மை கண்டா மன்றே? ஸநாதனத்வம் தர்மத்திற்குளதாமேயன்றி அதைக்கைப்பற்றி யவர்கட்கின்றாம். அவ்வாறே, தொல்சீர் சிறுக்குவிசேடணமாவதன்றிச் சீரையெடுத்துரைப்பார்க்கு விசேடணமாகாது. இனி, 'பார்மலி தொல் புதுவைக்கோன்' என்றதில், தொன்மை புதுவைக்கடைமொழியாய்நின்ற தால், அப்பாட்டு பின்னகர்த்துருகமாகமாட்டாதெனக்கொள்க. 'குழற் கோதைமுன்கூறிய' என்பதில் முன் என்றது இங்குப் புராதனவசன மன்று. பூர்வசப்தபர்யாயமாய்ச் சாற்றுப்பாட்டுக்கூறுவதனமுன்பு

கூறினமையை விசேடித்து அவ்வழியாகப் பாடல்பத்திற் கடைமொழி யாய்நிற்றலால் இதுவும் பின்னகர்த்துருகமாகவேண்டுமென்கிற நிர்ப்பந்த மில்லை. அப்பாடல்கள் ஸமானகர்த்துருகமாகக் கொள்வதில் விரோத மிலலை. 'வீரணிதொல்புகழான்விட்டுசித்தன' என்பது வீரப்பாடுற்ற அநாதியான வாழ்த்துரைக்கும் விட்டுசித்தனென்றபடி. ஈண்டுவீரப்பா டென்றது இந்திரியஜயத்தை. 'முந்தையாயிரம்' பழமையான வேதார்த் தத்தை வெளியிட்ட ஆயிரம்பாட்டு என்க. அன்றியும், வேதார்த்தங்களை வெளியிடுவதில் முற்பாடுடைய ஆயிரம்பாட்டு எனினுமமையும். ஏனைய தொன்மைக்கும் சொற்பொருளொற்றுமையாற் பொருளின்றொன்மை சொன்மேனின்றதெனக் கொள்க.

௧௪. நாலாயிரப்பிரபந்தங்களின் சாற்றுப்பாக்களனைத்தும் கி. பி. 9-ம் நூற்றாண்டிலிருந்த நாதமுனிகள்காலத்திற்குப்பின்பும், கி. பி. 12-ம் நூற்றாண்டிலிருந்த இராமாநுஜர்காலத்திற்கு முன்பும் ஏற்பட்டிருத்தல் வேண்டுமென ஆராய்ச்சிமுடிவு கூறினர்.

நாதமுனிகளிருந்த வீரநாராயணபுரத்திற்கு யாத்திரைவாசிகளாகிய சில ஸ்ரீவைஷ்ணவர்கள் சென்று அங்கெழுந்தருளியிருக்கிற பெருமானை யடிவணங்கி "ஆராவமுதே" என்ற திருவாய்மொழிதொடங்கி,

"உழலையென்பில்பேய்ச்சிமுலையூடவளையுயிருண்டான்
கழல்களவையேசரணாகக்கொண்டகுருகூர்ச்சடகோபன்
குழலின்மலியச்சொன்னவோராயிரத்துளிப்பத்தும்
மழலைதீரவல்லார்காமர்மானேய்நோக்கியர்க்கே" (48—11)

என்ற சாற்றுப்பாட்டளவும் பாடிமுடிக்க அதுகேட்ட நாதமுனிகள் அவ்வைஷ்ணவர்களையழைத்து நீவிர்பாடிய இறுதிப்பாட்டில் ஆயிரத் துளிப்பத்தும் என்று வந்துளதே? நுங்கட்கு ஆயிரம்பாட்டும் தெரியு மோவெனவினவ அவர்கள் எங்கட்கு இப்பத்துப்பாட்டுமாத்திரமே தெரியுமென்றனரெனக் குருபரம்பரை புகலாநிற்கும். இதனான் நாத முனிகள்காலத்திற்கு முன்னரே சாற்றுப்பாக்களிருக்கின்றன என்பது போதரும். போதரவே நாதமுனிகள்காலத்திற்குப்பின் சாற்றுப்பாக்க ளுண்டாயிருத்தல்வேண்டுமெனக்கூறியது சரியன்றெனவிடுக்க.

---

ஆ. அரங்கராமாநுஜப்பிள்ளை,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர், சேதுபதிஹைஸ்கூல், மதுரை.

# புத்தகமதிப்புரை.

க. விமலாதேவியென்னும் சரித்திரசம்பந்தமாயுள்ளதொரு தமிழ் நாவல்:—இது, சாத்தூர் ஹிந்துநாடார்கள் நிறுவி நடத்திவரும் எட்வர்டு உயர்தரவித்தியாசாலைத்தலைவர் ஸ்ரீமத். V. K. ராமமேனன் B A, L.T., அவர்கள் மலையாளத்தில் எழுதியதன் தமிழ் மொழிபெயர்ப்பாகப் பாருரைச் சார்ந்த சேந்தமங்கலத்துள்ள பாளயம் பாலிகாபாடசாலைத்தலைவரான ஸ்ரீமத். R. அப்பாத்துரை ஐயரவர்களால் எழுதப்பட்டது. இதனைத் திருச்சியிலுள்ள தேசீயகலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் பார்வையிட்டு ஆங்காங்குவேண்டிய விஷயங்களைச் சேர்த்துப் புதுப்பித்து மிகவும் திருப்திகரமாய்ப் பதிப்பித்திருக்கிறார்கள். இது சரித்திரசம்பந்தமான விஷயங்களைக் கொண்டு தெளிவான தமிழ்நடையில் யாரும் விரும்பிப் படிக்கும்படி யெழுதப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் தாம் எழுதிய பலபுத்தகங்களையும் அச்சிட்டுத் தமிழ்பயில்வார்க்குதவிவருவதோடு பிறரெழுதுமவற்றுள்ளு நலலனவற்றைத் தெரிந்தெடுத்துப் பரிசோதித்து அச்சிடுவிக்கும் ஊக்கமும் உழைப்பும் பாராட்டத்தக்கன இப்புத்தகத்தின்விலை ரூபா. 1–2 வேண்டுவோர் ஸ்ரீமத் இ மா. கோபாலகிருஷ்ணக்கோனார், புத்தக வியாபாரி, புதுமண்டபம், மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

உ. நாலடியார்:—இதன் 25ம் அதிகாரம் முதல் 36ம் அதிகாரம் முடியவுள்ள செய்யுள்களுக்குத் திருச்சி நேஷனல் வித்தியாசாலைத் தமிழ்ப்பிரசங்கியாரான ஸ்ரீமத் ம கோபாலகிருஷ்ணையரவர்களால், பதவுரை, குறிப்புரை, கருத்துரை முதலிய எழுதப்பட்டு ஆங்கிலகலாசாலையுபாத்ரமாணவர்களுக்கு மிகவும் உபயோகமாகும்படி பதிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு எட்டு. வேண்டுவோர் ஸ்ரீமத். இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார், புத்தகவியாபாரி புதுமண்டபம், மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

ங. மேருமந்தரபுராணம்:—இது வீடூர் ஸ்ரீமத். கு. அப்பாசாமி சாஸ்திரியாரியற்றிய உரையுடன் சென்னை பிரஸிடென்ஸி கலாசாலைத் தத்துவசாத்திரபோதகாசிரியரான ஸ்ரீமத். அ. சக்கரவர்த்தி M.A., I.E.S,

அவர்களால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர்வரலாறு காலம் முதலியனவும், ஜைனசமயக்கோட்பாடுகளும், பிறசமயக்கோட்பாடுகளும் மேருமந்தரபுராணக் கதைச்சுருக்கமும், ஸ்ரீபுராணத்திலுள்ள மேருமந்தரபுராண மணிப்பிரவாளப்பகுதியும் நன்றுயெழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் ஜைனசமயக்கோட்பாடறியவும், தமிழ்ச்சுவை அறியவும் விரும்புவோர்க்கு மிகவும் பயன்படத்தக்கது. இதன் விலை ரூபா ஆ௩. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப் பெறலாம்.

௪. கண்ணபபர் கலம்பகம் :— இது, புதுவைக் கவர்ண்மெண்டுக் கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதரும், தமிழ்மகவுப்பத்திராதிபருமான ஸ்ரீமத். வீ. துரைசாமிமுதலியாரவர்களாற் கலம்பகவுறுப்புக்களமைபச் செவ்விய செய்யுள்களாற் செயயப்பட்டிருக்கிறது. இதற்குப் பல சிறந்த பண்டிதர்களாற்கொடுக்கப்பட்ட சிறப்புப்பாயிரமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இலக்கணமுறையானமைந்த சிறந்த பிரபந்தங்களியற்றும் புலவர்களருகிய இக்காலத்தில் இப்பிரபந்தமியற்றிய முதலியாரவர்களது செய்புளியற்றுந்திறமை பாராட்டத்தக்கது. இதன் விலை அணு மூன்று. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

௫. மணிமேகலை (30-வது பவத்திறமறுகெனப்பாவைநோற்ற காதை மூலமும் உரையும், :— இது; சென்னையிலுள்ள தென்னிந்திய பௌத்தசங்கத் தினருள் ஒருவரான பிரம்பை ஸ்ரீமான் சி. மாணிக்கம அவர்களால் எழுதப்பட்டு, அப்பௌத்தசங்கத்தலைவரும், சென்னைப் பச்சையப்பன்கல்லூரிப் பதார்த்தவிஞ்ஞானசாத்திர போதகாசிரியருமான புரொபஸர் ஸ்ரீமத். P. லக்ஷ்மிநரசு B.A., அவர்களாற்பரிசோதிக்கப்பட்டு அச்சிடப்பட்டது. இதனாற் புத்தசமயக்கோட்பாடுகள் தெளிவாயறியத்தகும். இவ்வாறு தத்தம் சமயநூல்களைத் தாம் பரிசோதித்துப்பதிப்பிக்க முன்வருதல் பாராட்டத்தக்கது. இதன் விலை அணு ஆறு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

௬. பிரசங்கரத்தினதீபம் :— இது, யாழ்ப்பாணத்து உடுவில் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். வ மு இரத்தினேசுவரையரவர்களால் எழுதியச்சிடப்பட்டது. மகிபாலன்பட்டிவித்வான் மு. கதிரேசச்செட்டியாரவர்களால் முகவுரையும், மற்றும் பல தக்கபண்டிதர்களால் நன்மதிப்பும் கொடுக்கப்பெற்றிருக்கிறது. சைவசமயப் பிரசங்கஞ்செய்பவர்களுக்கும் பிறர்க்கும் பயன்படத்தக்கது. இதன் விலை அணு எட்டு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.